1870-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS" JAFFNA. / phone: No. 100.


# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"


78-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு மார்கழி மாதம் 3-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 47-ம் இலக்கம்


## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சென்ற வியாழக்கிழமை பிற்பகல் முதல் ஞாயிற்றுக்கிழமை வரையில் இவ்விடம நல்லமழை பெய்யலாயிற்று. இத்தமழை யாழ்ப்பாண முழுவதும், கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளிலும் பெய்து, அங்கு நெடுநாளாக வாடியிருந்த நெற்பயிர்நிறைந்த வயல்களையெல்லாம் வெள்ளத்தால் தேங்கச் செய்திருக்கிறது. இரணைமடுக்குளத்தின் நீர்மட்டமும் படிப்படியாக ஏறிக்கொண்டுவருகின்றது.

### டிப்புளோமாப் பரீட்சைப்பேறு

சென்ற ஆனிமாதம் நடந்தேறிய இலங்கைச்சர்வகலாசாலைக் கல்வி டிப்புளோமாப் பரீட்சையிலே வண. பி. தியோகுப்பிள்ளை சுவாமியவர்களும், வண. எஸ். நீக்கிலாப்பிள்ளை சுவாமியவர்களும் அரங்கேறியிருக்கிறார்களென அறிந்து சந்தோஷமானோம்.

### பெனெமெறென்ரி மெடல்

சிலாபமேற்றிராசனத்திலே கட்டுநேரியாவைச் சேர்ந்தவர்களான திரு. டபிள்யு. பெனெடிக்ற் திசேரு, திரு. டபிள்யு. சலமன் பெர்னாண்டோ எனனும் கத்தோலிக்கபிரமுகர்கள் இருவரும் திருச்சபைக்கு ஆற்றியுள்ள சிறந்த சேவைகளைப்பாராட்டிப் 12-ம் பத்திநாதப்பாப்பரசர் அவர்களுக்கு பெனெமெறென்ரிவிருது சங்மானித்திருக்கின்றார். அங்குள்ள அர்ச். செபஸ்தியாரின் ஆலயத்திலே சென்ற ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த வைபவம் ஒன்றின்போது சிலாப மேற்றிராணியாணடவர் சம்பிரதாய முறைப்படி இருவருக்கும் அந்தவிருதுகளை வழங்கலாயினர்.

### பலாலி ஆசிரியகலாசாலை

பலாலி, அரசினர் ஆசிரியகலாசாலை அதிபராக இருந்துவருகிறவரான திரு. பி. சவிரிமுத்து, எம். ஏ. அவர்கள் மட்டக்களப்பு, அரசினர் ஆசிரியகலாசாலை அதிபராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இந்த நியமனம் தற்காலிகமானதென அறிகின்றோம்.

### புதிய சமாதானநீதவான்

மானிப்பாய்க் கிராமச்சங்க தலைவரும், யாழ்ப்பாண டிஸ்திறிக்கிலுள்ள கிராமச்சங்கங்களின்சங்க தலைவருமான முகாந்திரம் வைத்தியலிங்கம மகேசன் அவர்கள் ஜே. பி. எனப்படும் சமாதான நீதவானாக நியமனம்பெற்று, யாழ்ப்பாண உதவிடிஸ்திறிக் நீதிபதியான திரு. ஏ. ஈ. எல். கொறெயா அவர்கள்முன்னிலையில் சென்றதிங்கட்கிழமை விசுவாசப் பிரமாணஞ்செய்திருக்கின்றார். இவர் ஆற்றியுள்ள சிறந்தபொதுசனசேவைகளைப்பாராட்டி அரசினர் இவருக்கு ஏலவேமுடிசூட்டுவிழாவிருதும் சங்மானித்திருக்கின்றனர்.

## ஆசா. யோசேவாஸ் முனிவர்

இலங்கை அப்போஸ்தலரெனப் பெயர்விளங்கும் ஆசா. யோசேவாஸ் குருமுனிவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டுதற்கானவிசாரணையை 240 வருடங்களுக்குப்பின் கடைசியாக வத்திக்கான் திரும்பவும் தொடக்கியுள்ளது. இவர் கோவையிலிருந்து 1697-ம் ஆண்டு இலங்கைக்குவந்தார். இங்கு ஒரேயொரு கத்தோலிக்ககுருவானவராக ஒன்பதுவருடகாலம் தன்னந்தனிமையாகத் திருத்தொண்டாற்றினர். 1711-ம் ஆண்டு பரமபதம் அடைந்தார். 26 வருடங்களின்பின் இவரது முத்திப்பேறுபெற்ற பட்டத்திற்கானவிசாரணை தொடக்கப்பட்டது. ஆனால், முக்கியவிபரங்கள் குறைவுபட்டகாரணமாகத் தடைப்படலாயிற்று.

## வித்தியாதிபதியின் பிரயாணம்

இலங்கையின் வித்தியாதிபதியாய் இருந்துவந்தவரான டக்றர் எச். டபிள்யு. ஹவுஸ் அவர்கள் தமது உத்தியோக காலவெல்லைமுடிந்து, சென்றதிங்கட்கிழமை தமமுடைய பதவியிலிருந்துநீங்கித் தமது பாரியாருடன் அன்றுதானே கப்பல் மார்க்கமாக இங்கிலாந்துக்குப் பயணமாயினர். துறைமுக ஜெற்றியிலே நண்பர்கள் பலரும் கூடிநின்று அவர்களை வழியனுப்பி வைத்தார்கள்.

## மிளகாய் — வெங்காயச்செய்கை

தனக்குத் தேவைப்படும் மிளகாய், வெங்காயத்தைத் இன்னும் நான்குவருடத்திலே இலங்கை கண்டுகொள்ளத்தக்கதாய் அவற்றின் உற்பத்தியை விருத்திசெய்வதற்கான நடவடிக்கைகளை உணவு—கமத்தொழில் மந்திரிகாரியாலயம் எடுத்திருக்கின்றது. பொலனறுவையிலே செய்கையிலலாத பதினாயிரமஏக்கர் மேட்டுநிலத்தைத் தப்புரவுசெய்து, அதிலே வெங்காயம், மிளகாய் செய்கைபண்ண அது தீர்மானித்திருக்கிறது.

## அரசாங்க அரிசிமில்கள்

செலவுக்குக்கட்டாத காரணமாகக் கொழும்பிலும், ஏனையவிடங்களிலுமுள்ள தனது அரிசிமில்கள்பத்தையும பிறநாடுகளுக்குவிற்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது. ஒவ்வோர்மில்லும் ஒருலட்சம்ரூபா பெறுமதியுடையதாகும். இவற்றிற்சில அம்பாந்தோட்டை, மாத்தறைஆகியஇடங்களிலும், ஏனையவைகள் வடமத்திய மாகாணத்திலும் இருக்கின்றன. இவைகளிலே குற்றுவதற்குப் போதியநெல் கிடைக்கவில்லை என்றும், புசலஒன்றுக்கு அரசாங்கத்தின்உத்தரவாதவிலையாகிய 12ரூபாவிலும் கூடியவிலைகொடுத்து வியாபாரிகள் நெல்லை வாங்குவதாலே அரசாங்க மில்களுக்கு நெல்லுக்கிடைப்பதில்லையென்றும் சொல்லப்படுகிறது.

## அரிசித்தேவையில் அரைவாசி

அடுத்தவருடத்திலே சீராக மழைபெய்துகொடுக்குமானல் அறுவடையின்போது நானகுலட்சம்தொன் அரிசிகிடைக்குமென்றும, இலங்கையின் முழுஅரிசித்தேவையில் இது நூற்றுக்கு 45 விகிதமென்றும உணவு—கமத்தொழில மந்திரியாரின் நிரந்தரகாரியதரிசியான திரு. கே. ஆழ்வாப்பிள்ளை தெரிவித்திருக்கின்றார். இத்தப்பெரும்போகத்தில் நெல்விளைவிக்கப்படும் 6,50,000 ஏக்கர் வயல்களிலிருந்தும், அடுத்தசிறுபோகத்தில் நெல்விளைவிக்கப்படும் 4,50,000 ஏக்கர் வயல்களிலிருந்தும் பூச்சிபுழுக்களால் ஏற்படும்அழிவும், விதைநெலலும நீங்கலாக ஏக்கர்ஒன்றுக்குச் சராசரிவீதமாக 28 புசலநெல் விளையுமென அவர் மதிப்பிட்டிருக்கின்றார்.

## தேர்தல் அப்பீல் மனு

பாராளுமன்றச் சனப்பிரதிநிதிகள் சபைக்கு மட்டக்களப்புத் தொகுதிப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்றவரான திரு. ஆர். பி. கதிர்காமர் அவர்களின தேர்தல் முறைகேடானதென ஆட்சேபித்து ஐனுப் மீறுலெல்லை முகம்மது காசிமஎன்பவர் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பித்தமனு அப்போது சங். எச். ஏ. டி சில்வா நீதியரசரால் விசாரணைசெய்து செலவு தொகையுடன் தள்ளப்படலாயிற்று. இத்தத்தீர்ப்பை ஆட்சேபித்து அவர் செய்துகொண்ட அப்பீலும சென்றதிங்கட்கிழமை மூன்று நீதியரசர்களால் விசாரணைசெய்து செலவுதொகையுடன் தள்ளப்படலாயிற்று. செலவுதொகை 75 கினி—அதாவது 1,181 ரூபா 25 சதம் வரையிலாகும்.

## வாழ்க்கைச் செலவு

சென்றகார்த்திகை மாதத்திற்கான வாழ்க்கைச்செலவுப்புள்ளி முந்திய ஐப்பசியிலும் 2·1 புள்ளியால இறங்கியிருக்கிறது. கார்த்திகைமாத வாழ்க்கைச்செலவுப்புள்ளி 100·9. ஐப்பசி மாதப்புள்ளி 103. அரிசி, மா, கருவாடு, உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைகள் இறங்கியமையே இந்த இறக்கத்திற்குக் காரணமாகுமென்று கருதப்படுகிறது.

## மற்றோர்மனு அப்பீல்

சனப்பிரதிநிதிகள்சபைக்கு ஹக்மனைப்பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப் பெற்றவரான திரு. சி. ஏ. தர்மபாலா அவர்களின தேர்தலை ஆட்சேபித்துத் திரு. எம். ஜே. அபெயவர்த்தனஎன்பவர் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பித்தமனு சங். சுவான்நீதியரசரால் சமீபத்திலே விசாரணைசெய்து செலவுதொகையுடன் தள்ளப்படலாயிற்று. இத்தீர்ப்பை இவர் ஆட்சேபித்துச் சென்றதிங்கட்கிழமை அப்பீல்செய்திருக்கின்றார்.

## நாத்தாண்டியாத் தேர்தல்மனு

பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள் சபைக்கு நாத்தாண்டியாப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்றவரும், அச்சபையின் ஸ்பீக்கர்—அதாவது சபாநாயகருமான திரு. அல்பேட் எவ். பீரிஸ்அவர்களின் தேர்தல் முறைகேடானதென ஆட்சேபித்துத் திரு. பி. எஸ். பெர்ணண்டோ என்பவர் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பித்தமனு சென்ற திங்கட்கிழமை சங். சுவான் நீதியரசரால் விசாரணை செய்யப்பெற்றுச் செலவு தொகையுடன் தள்ளப்படலாயிற்று. செலவுதொகை 2,500 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.

## சிகறெற் புகையிலைச் செய்கை

நீர்வேலிப்பகுதியிலே சென்றவருடத்திலும்பார்க்க இவ்வருடத்தில் சிகறெற்புகையிலை அதிகமாகச் செய்கை பண்ணப் பட்டிருக்கிறது. அதனல் அங்குள்ளகமக்காரர் கூட்டுறவுச் சங்கம்ஒன்றைஅமைத்து, அதன்மூலம் அப்பகுதியில் செய்கைபணணப்படும் சிகறெற்புகையிலையைப் பதப்படுத்தும் தொழில்நிலையம்ஒன்றை ஸ்தாபிக்க ஆயத்தப்படுகின்றார்கள்.

## நெல் ஆராய்ச்சி நிலயம்

இலங்கையில் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தைப்போல நெல் ஆராய்ச்சி நிலையம்ஒன்றையும் அடுத்தவருடத்தில் அமைக்க உணவு—கமத்தொழில் மந்திரியார் முடிவுசெய்திருக்கின்றார். இலங்கையைச் செல்வச்செழிப்புள்ள ஓர்நாடாக்க செய்யவேண்டுமென்ற அரசாங்கத்தின கொள்கைக்கிணங்க, அடுத்துநிகழும் 1954-ம் ஆண்டிலே அவர் இலங்கையில் உணவுப்பொருட்களின் விளைவை அதிகப்படுத்திப் பிறநாடுகளிலிருந்து உணவுப்பொருட்களின் இறக்குமதியைக் குறைக்கத் திட்டஞ்செய்திருக்கின்றார்.

## குஷ்டரோகப் புதியசிகிச்சை

இந்தியாவிலே குஷ்டரோகர்கள் மத்தியில் தற்போது வைத்தியதொண்டாற்றிவருகிறவரும், ஓர் அமெரிக்க இளம்போராசிரியருமான டக்றர் டபிள்யு. பிறௌண்ட்என்பவர் சுவமாகக் கண்டுபிடித்திருக்கும் சத்திரவைத்தியமுறையானது இப்பயங்கர ரோகத்தாலே கைகள் அலவட்சணமுற்றுவருந்துகின்ற லட்சக்கணக்கான பேர்களுக்கெல்லாம் ஓர் புதியநம்பிக்கையைப் பிறப்பித்திருக்கின்றது. இவர் தமதுபுதியமுறைகொண்டு சத்திர வைத்தியஞ்செய்த முதற்குஷ்டரோகி கையிரண்டும் அழுகிப்போய் வெகுவாக அவலட்சணமுற்றிருந்தான். சிகிச்சையின்பின் அவன் குணமடைந்தது மாத்திரமல்ல, தற்போது ஓர்தைப்பிஸ்றாக வேலைபார்த்துச் சந்தோஷமானசீவியம் நடத்தியும் வருகின்றனும்.

# ஆசிரியரின் யூபிலிவிழா



ஆசிரியர் டானியல் ஜேச்

"வடமாகாணத்திலே கத்தோலிக்க முகாமையின்கீழுள்ள பாடசாலைகளிலே 700 ஆசிரியர்கள்வரை கல்விபயிற்றுகின்றார்கள்; அவர்களுள் கத்தோலிக்கக்கல்வியையும், தமதுகடமையையும் உணர்ந்து மனச்சாட்சியுடன் கற்பிப்பவர்களில் ஆசிரியர் டானியல்ஜேச் அவர்களும் ஒருவரென்று சொல்வேன்; இவர் ஆசிரியகடமையைப் பொறுப்பேற்று இருபத்தைந்து வருடங்கள் பூர்த்தியடைந்துவிட்டன; அத்தனைவருடங்களிலும் சிறந்தமுறையிலே இவர் கத்தோலிக்ககல்வி பயிற்றிவந்திருக்கிறார்; ஒழுக்கமானசீவியம், தமது பாடசாலைக்கடமைகளில் கரிசனை, கத்தோலிக்க கல்விபயிற்றுவதில் அக்கறையாதியன நன்கமைந்த சிறந்த ஓர்ஆசிரியரின் சேவையானது எமது சமூகத்தைவிட்டு இன்னும் சிலகாலத்தில் நீங்கும்படியாக அரசினரின் வயதெல்லை கட்டுப்படுத்திவிடுமோ, இவரின்சேவையை எங்கள் பாடசாலைகள் பெறமுடியாமல் போய்விடுமோ என்று நினைக்கும்போது எனக்குக் கவலை உண்டாகின்றது; ஆயினும இவர் பாடசாலையைவிட்டு நீங்கினாலும் கத்தோலிக்க சேவையை விட்டுநீங்கமாட்டாரென்ற திறம்பாத நம்பிக்கையும் உண்டாகாமலில்லை" என்று பறப்பாங்கண்டல் கத்தோலிக்க பாடசாலைத் தலைமைஆசிரியர் டானியல் ஜேச்அவர்களது ஆசிரியத்தொண்டின் 25-ம் வருட வெள்ளியூபிலி விழாக் கொண்டாட்டத்துக்கென யாழ்ப்பாணமிருந்துவந்த கத்தோலிக்கபாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரர் அதிவண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம் சுவாமியவர்கள் அவ்விழாவிற்குத் தலைமை தாங்கி நிகழ்த்திய தலைமைப்பேருரையில் உணர்ச்சிததும்பப்பேசி யூபிலி நாயகருக்குச் சோபனங்கூறினார்.

இந்தயூபிலிவிழா 21-11-53 சனிக்கிழமைகாலை பறப்பாங்கண்டல் ஆலயத்திலே வண. எவ். றெனுட்சுவாமிகளால் நிறைவேறிய யூபிலிதோத்திர பூசையுடன் ஆரம்பமானது. பிற்பகல் 2 மணிமுதல் பாடசாலை மாணவர்களிடையே விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. 4-30 மணிக்குத் திரளாகக்குழுமியிருந்த குருமாரும், ஊரவர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் பாடசாலை மைதானத்திலிருந்து யூபிலிநாயகனை ஆலய முன்றிலில் அமைக்கப்பட்டிருந்த அழகானபந்தருக்கு அழைத்துச்சென்று அதிவண. மதுரநாயகம் சுவாமியவர்கள் தலைமையிலே உயர்மேடையில் அமரச்செய்ததும் செல்வன் ச. சந்தியாப்பிள்ளை எனும்மாணவரால் மாலை சூட்டப்பெற்று, செல்வன் அ. சந்தியோகு எனும்மாணவரால் சோபனபத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டபின் செல்வி எ. மரியை லெம்பேட்எனும் மாணவியால் அன்பளிப்புவழங்கப்படலாயிற்று.

அதன்மேல் பறப்பாங்கண்டல் பாடசாலைத் தலைமுகாமைக்காரரும், உயிலங்குளக்கட்டளைக்குருவுமான வண றெனுட்சுவாமியவர்கள் யூபிலிநாயகரின் குணவிசேஷங்களைப்பற்றிப் பேசியபோது: ஜேச்மாஸ்டர் இப்பாடசாலைக்குவந்து மூன்றுவருடங்களாகின்றன; நானும்வந்து மூன்றுவருடங்கள்தான்; இக்காலத்திலே அவரின் பாடசாலை வேலையைப்பற்றிப் பெற்றோர், மற்றெவரோ குறைசொன்னதில்லை; பாடசாலைவேலையைப் பிரமாணிக்கமாகச் செய்துவருகின்ற ஆசிரியரான அவரிடம் எந்தவேலைப்பொறுப்பை அளித்தாலும் எவருடைய தலையீடுமின்றித் தமது கடமையை உணர்ந்து மனச்சாட்சிக்குப் பயந்து சிறப்பாகச் செய்துமுடித்துவிடுவார்; அப்படியான ஓர் சிறந்த, நம்பிக்கைக்குப்பாத்திரமான ஆசிரியர்அவர் எனக் கூறினார்.

தொடர்ந்து பருத்தித்துறைக் கத்தோலிக்க பாடசாலைத் தலைமைஆசிரியர் பண்டிதர் ஜி. ஜே. பெனடிக்ற் அவர்களும், உயிலங்குளம், கத்தோலிக்கபாடசாலைத்தலைமைஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளைஅவர்களும், கொழும்பு, அர்ச். சூசையப்பர்கல்லூரி ஆசிரியர் தங்கராசாஅவர்களும், மன்னார்ப்பகுதிப் பாடசாலைகளின் வித்தியாதரிசி எஸ். சுவாட்ணம் அவர்களும் பேசியபோது: ஆசிரியர் ஜேச்அவர்கள் ஆசிரியலட்சணங்கள் நன்கமைந்த ஓர் தலைமைஆசிரியராய், மன்னார்ப்பட்டின சங்க உபதலைவராய், அகில—இலங்கைத் தமிழாசிரியர்சங்க உபதலைவராய், மன்னார்த் தமிழாசிரியர்சங்க தலைவராய், கொழும்புத்துறைப் பழையமாணவர் சங்கத்தில் ஓர் முக்கியமானவராய் விளங்கியிருந்து, ஆய்ந்தோய்ந்து அமைதியாகவும், திறமையாகவும் ஆற்றிவரும் கல்வித்தொண்டு, சமயதொண்டு, சமூகதொண்டு ஆதியவைகளைப் பாராட்டி அவருக்குச் சோபனங் கூறினார்கள்.

அதன்பின் யூபிலிநாயகர் எழுந்து: விழாவிற்குச் சமுகமளித்த அனைவர்க்கும் நன்றிதெரிவித்து, பாடசாலை ஆசிரியர்களின் ஒத்துழைப்பும், ஊக்கமும், அன்புந்தான் இந்தப்பரிமளிப்பான கொண்டாட்டத்திற்குக் காரணமாகும்; பெற்றோரே! உங்கள் பிள்ளைகள் கல்வியோடு தேவபக்தியுமுடையவர்களாய் வளரத்தக்கதாக எங்களோடு ஒத்துழையுங்கள்; தேவபக்தி வளர்க்தால் அதனோடு நல்லொழுக்கமும் கைகோர்த்துக்கொண்டு வளரும்; நல்லொழுக்கமுள்ள மக்கள்தான் குடும்ப அமைதிக்கும், உலக அமைதிக்கும் அவசியம் தேவைப்படுகின்றார்கள். பாடசாலையிலே நாம் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும், கல்விவளர்ச்சிக்குமாக முயற்சியெடுக்கும்போது பெற்றோர் தங்கள் எண்ணப்படி தங்கள்பிள்ளைகள் நடத்தப்பட வேண்டுமெனக் குறுக்கிடுவதால் எத்தனையோ சிறந்த காரியங்களை நாம் சாதிக்கமுடியாமல் இருக்கிறோம்; மன்னார்ப்பிரிவிலுள்ள ஒவ்வொருவரும் படித்து முன்னேற வேண்டுமென்பதே எனது நெடுநாள் ஆவல்; பெற்றோர் இதற்கு உடன் முயற்சி எடுக்காவிடின் எவராலும் இதை நிறைவேற்றிவைக்க முடியாது; நீங்கள் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற தூரஇடங்களுக்கு அடிக்கடி பிரயாணஞ்செய்யுங்கள்; இப்படியான முற்போக்கு தானாகஏற்படும் எனப் பேசினார். பின்னர் பாடசாலை மாணவர்களால் நடிப்பு, நடனம், கும்மி, கோலாட்டம், உடற்பயிற்சி என்பன சிறந்தமுறையாக நடத்தப்பட்டு விழாக்கொண்டாட்டம் இனிதே முடிவுற்றது. — நிருபர்

---

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

நமது கத்தோலிக்கதமிழ்ப்பாடசாலைகளின 1954-ம் ஆண்டிற்கான 1-ந் தவணை தைமாதம் 5-ந் திகதி ஆரம்பமாகும்.

பாடசாலைகளின் தவணைகளும் பகிரங்க விடுமுறை நாட்களும் பின்பு தெரிவிக்கப்படும்.

## ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்

ஞானஒடுக்க போதகரின் வசதியை முன்னிட்டு 9-12-53-இல் தொடங்கவிருந்த ஞானஒடுக்கம் 8-12-53-இல் ஆரம்பமாகும்.

T. A. J. Mathuranayagam,
Gen. Manager, R. C. Schools.
Jaffna 3-12-53.

---

# தேம்பாவணியும் செபமாலையும்

## களிகூர்ந்தகாரணிக்கம்

### 2-ம் காரணிக்கம் — 7-ம் பிரியதத்தம்

### 17. என்னைப் பாக்கியவதி என்பார்கள்

"ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள்நீரே! உமது திருவயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதாமே" என எலிசபெத்தம்மாள் மரியாளைவாழ்த்தி வரவேற்றனள்அன்றோ! தனது இருதயஅந்தரங்கத்திலே எவருமறியாத வகையாகக் காப்பாற்றிவந்த அந்தஇரகசியத்தை எலிசபெத்தம்மாள் வெளிப்படுத்தியபோது மரியாளின் மாசற்ற உள்ளமானது ஆனந்தத்தால் பூரிப்படைந்தது. அதனால் தனது உதரத்தில் எழுந்தருளியுள்ள பரிசுத்தருக்கு அதுவரையும் அந்தரங்கமாக நன்றித்துதி செலுத்திவந்த கன்னிகை அப்போது பகிரங்கமாகத் தனதுநன்றித்துதியைத் தெரிவிக்க விரும்பினள். இருதயமோ ஆனந்தத்தால் நிரப்பப்பட்டுப் பொங்கிவழியும் நிலைமையில் இருந்தது. தன்னையும் மறந்தவளாய்த் தனது கருப்பத்தில் உதித்த சர்வவல்லப கடவுளின் அருளால் ஏவப்பட்டு நன்றித்துதியாக ஓர் அழகிய கீதத்தைப் பாடலானாள்.

"தெருளால் தெளிந்த என்உளம்என்
இருநா யகனைப் புகழ்ந்திறைஞ்ச..."

ஞானத்தால் (தெருளால்) தெளிந்த எனது உள்ளமே என ஆண்டவனைத் துதித்து வணங்கவும்,

(என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது)

"அருளால் உயர்என் உயிரென்னை
அளித்தோன் முகத்திற்(கு) எழுந்(து)
உவப்ப

அருளினால் பொலிந்த (உயர்) என் உள்ளமே (உயிர்) என்னை இரட்சித்த நாதன் முகத்தில் எழுந்து மகிழவும்,

(என் இரட்சணியமாகிய சர்வேசுரனிடத்தில் என்மனமும் ஆனந்தமாய் எழும்பி மகிழ்கின்றது)

"மருளால் தளர்ந்த இவ்வடிமை
மனந்தான் இரங்கிப் பார்த்தமையைப்
பொருளால் ......"

தளர்ந்து மயங்கிய (மருள்) அடிமைப்பெண்ணாகிய என்னை ஆண்டவன் மனமிரங்கிப் பார்த்ததையின் பொருட்டாக,

(ஏனெனில், தமது அடிமையானவளுடைய தாழ்மையைக் கிருபாகடாட்சத்தோடு பார்த்தருளினார்)

"............ எவரும் முறைமுறையாற்
புகழ்(ந்)து என்னைச் செல்விஎன்பார்"

எல்லாரும் எல்லாத் தலைமுறையோடும் என்னைப்புகழ்ந்து பாக்கியம் உள்ளவளே என்பர்.

(ஆகையால் இதோ இக்காலமுதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்)

தெருளால் தெளிந்த என்உளம்என்
இருநா யகனைப் புகழ்ந்திறைஞ்ச
அருளால் உயர்என் உயிர்என்னை [உவப்ப
அளித்தோன் முகத்திற்(கு) எழுந்(து)
மருளால் தளர்ந்த இவ்வடிமை
மனந்தான் இரங்கிப் பார்த்தமையைப்
பொருளால் எவரும் முறைமுறையால்
புகழ்ந்(து) என்னைச் செல்விஎன்பார்.

மேலும், தொடர்ந்து பாடுகின்றாள்:

"விண்பால் முதன்மூ வுல(கு)அசைக்கும்
மிடலின் மிக்கோன் என்னிடத்து
திண்பால் வளமே செய்தமையால்
திருத்தன் நாமம் புகழ்படவே..."

வானம் (விண்) முதல் மூவுலகு அனைத்தையும அசைத்தற்குரிய வல்லமை(மிடல்) மிக்கோன் என்னிடத்திலே அற்புதமான செயல்களைச் செய்தமையால அவனுடைய பரிசுத்த நாமமே வாழ்த்தப்படுவதாக.

(ஏனெனில் வல்லமைமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்திற் செய்தருளினார்; அவருடைய நாமமோ பரிசுத்தமுள்ளது)

"நண்பால் இணையாக் குணத்தொகை
யோன்
நயந்(து)எஞ் ஞான்றும் முறைஅஞ்சா
மண்பால் தன்னைத் தொழு(து)அஞ்சும்
மக்கட் கேதான் தயைசெய்வான்."

அன்பினால்(நண்பால்) ஒப்பு(இணை) இலலாத கிருபை நிறைந்தவனாகிய கடவுள் மனம்பொருந்தி (நயந்து) எக்காலத்தும் தப்பாமல் பூவுலகிடத்து (மண்பால்) தன்னைவணங்கி அஞ்சாநிற்கும் மனிதர் யாவருக்கும் தயை செய்வான்.

---

பண்டிதர், C. செல்வரத்தினம்

---

(அவருடைய கிருபையும், தலைமுறை தலைமுறையாக அவருக்குப் பயந்து நடக்கிறவர்கள்மேல் தங்குகிறது.)

இவ்வாறாக மரியாள் தனது தேவதோத்திரப் பாடலைப் பாடுகிறாள். அவள் தனது நிலைமையைச் சரிவர அறிந்துகொண்டாள், அவளுடைய பரிபூரணங்களின்பொக்கிஷம் அளவிறந்தது. அவளுடைய தாழ்ச்சியே அவளுக்கு இறைவனின் கிருபாகடாட்சத்தைப் பெற்றுக்கொடுத்தது. மனுமக்களுள் வேறெவரையும்விட அதிகப் பூரணமாய்த் தன்னைச் சர்வேசுரன் மீட்டார் என்பதை அறிந்திருந்தாள். தன்னுடைய நினைவுக்கெட்டாத பரிசுத்ததனத்திற்குத் தன்னுடைய குமாரனின் பேறுபலன்களே காரணமென்பதையும் நன்றாய் உணர்ந்திருந்தாள். சர்வேசுரனிடமிருந்து வேறெவரும் பெறாததைத் தான்பெற்றிருந்ததால் வேறெவரும் கடன்படாதவிதம் தான் அவருக்குக் கடன்பட்டிருப்பதைக் கண்டறிந்தாள். சர்வேசுரன்முன்னே தான்ஒன்றுமில்லை என்பதைஉணர்ந்து அதைக் கபடின்றி ஒப்புக்கொண்டு வல்லபமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடம் செய்தருளினார் என்கிறாள். அடிமையாக எண்ணிய அவளை ஆண்டவளாக அமைக்கக் கடவுள் கிருபைக்கண்கொண்டு நோக்கியருளினார். அதனால் அந்தத்தாயைச் சகல தலைமுறைகளும் பாக்கியவதியென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றன.

# 'மரியாயின் வருட' ஆரம்ப விழா

பரிசுத்தபாப்பரசர் இம்மாதம் 8-ந் திகதியாகிய வருகிற செவ்வாய்க்கிழமை. ரோமைநகரின் கண் தேவதாயார்பேரால் உள்ள முதன்மைவாய்ந்த ஆலயமாகிய அர்ச். மேரிமேஜோர் மகாலயஞ்சென்று, தாமாகவே இயற்றிய ஓர்செபத்தைச்சொல்லியும், அந்நகரிலுள்ள பிள்ளைகளுக்கு விசேஷஆசீர்வாதம் அருளியும் 'மரியாயின் வருட'த் திறப்புவிழாவை நடத்திவைப்பார். இததிருவைபவம் நடைபெறவிருப்பது, அமலோற்பவ விசுவாசசத்தியம் ஒன்பதாம் பத்திநாத பாப்பானவராலே பிரகடனஞ்செய்யப்பெற்ற99-ம் ஆண்டு நிறைவுதினமன்ருகும். இவ்விதம் ஆடம்பரமின்றித் திறப்புவிழாவைப் பாப்பரசர் நடத்தவிருப்பது, பெரியவைபவங்களைக்காட்டிலும், மாதாவை நோக்கி அதிகமாகமன்ருடுவதே தமது விருப்பம் என்பதை அழுத்தமாக எடுத்துக்காட்டுதற்கேயென்று நம்பப்படுகிறது. ஆதலால், மரியாயின்வருடத்தை அவர்பிரகடனஞ்செய்தபோது, ரோமர்களின் விசேஷ பக்திவணக்கத்துக்கென அர்ச். மேரிமேஜோர் மகாலயத்தைத் தெரிந்துகொள்ளலாயினர். இது தேவதாயார் பேரால் உலகிலுள்ள மகாப்பெரிய திருசேத்திரமாகும். பாரம்பரியமகூறுகிறபடி, இது 352-ம் ஆண்டு ஆவணிமாதம் 5-ந் திகதியன்று எஸ்குய்லின்குன்றிலே அற்புதமாகப் பனிவிழுந்தமையை ஞாபகப்படுத்துமாறு லிபேறியஸ் எனும் பாப்பானவரால் அவ்வருடம் அடியிடப்பெற்று, முந்த லிபேறியானு மகாலயமென்றும், பின்னர் பனிமாதாமகாலயமென்றும் அழைக்கப்படலாயிற்று.

❊

## காத்துவைத்த கன்னியாஸ்திரி

பிரான்சில்பிறந்த சிஸ்றர் ஆன் மரியே றவெறன்னும் கன்னியாஸ்திரி ஓர்சத்திரவைத்தியராவர். இற்றைக்கு ஒருவருடத்தின்முன் இவர் ஓர்சீனக்கம்யூனிஸ்த சிறைச்சாலையில் இருந்துவந்தார். அப்போது கம்யூனிஸ்ததலைவன் ஒருவனுக்குக் கடுமையான சத்திரவைத்தியம் ஒன்று செய்யவேண்டிய அவசியம்நேர்ந்தது. அந்தககன்னியாஸ்திரி தனக்குச் சத்திரவைத்தியஞ்செய்து, தான்குணப்பட்டுவிட்டால் அவரையும், சிறையில் இருந்துவரும் வேறு மூன்று கன்னியாஸ்திரிமாரையும் விடுதலைசெய்துவிடுவதாக வாக்களித்தான். அவரும் சித்திகரமாகச் சத்திரவைத்தியத்தை நடத்தினர். அவனும் குணப்பட்டுத் தான்கொடுத்தவாக்கை நிறைவேற்றினன். சிஸ்றர் ஆன் மரியே விடுதலையடைந்து பிரான்சுக்குத் திரும்பினர். தற்போதுஇவர் சீனர்கள்மத்தியிலே திரும்பவும் வைத்தியவிஷனரியதொண்டுகள் ஆற்றுவதற்காக மலாயாவுக்கு வருகின்ருர்.

## நோயாளரின் திருயாத்திரை

காவுகட்டில்களிலே வளர்த்தப்பட்டிருந்த அசகதர்களான ஒருதொகை நோயாளர் பாப்பரசரின்பேட்டி பெற்றுக்கொள்வதற்காகக் காஸ்ரெல் காண்டல்போவிலுள்ள அவரது மாளிகைக்குச் சமீபத்திலே சுமந்துகொண்டு போகப்பட்டனர். மற்றும் ஒருதொகை நோயாளர் சில்லுக்கதிரைகளில் வைத்துத் தள்ளிக்கொண்டு போகப்பெற்றனர். இந்த யாத்திரிகர்கள் அமெரிக்க ஐக்கியதேசத்திலே செல்வி மேரி எலேன் கெல்லி எனும்மாதுவால் அடியிடப்பெற்ற ஷட்-இன்ஸ்எனும் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஐரோப்பிய திருசேத்திரங்களுக்குத் தங்கள் முதலாவது தேசிய யாத்திரையை நடத்துகின்ருர்கள். ஆயிரக்கணக்கான மைல் தூரத்திற்கப்பாலுள்ள தங்கள்வீடுகளிலிருந்து மிகநீடிய கஷ்டமான பிரயாணம் நடத்தி, அருந்தியாகஞ்செய்து, பெரும் வேதனை அனுபவித்துவந்த இந்த நோயாளரைச் சந்திப்பதில் தமக்குண்டான பெருஞ் சந்தோஷத்தைப் பாப்பரசர் தெரிவித்து: "திருசேத்திரங்களுக்கும், நித்தியநகருக்கும உங்கள்தரிசனையானது வேதனைகளைச் சகிப்பதற்குத் தைரியததையும், ஆற்றலையும் உங்களுக்குக் கொடுத்திருக்கிறதென்று நாம் நிச்சயமாயிருக்கிருேம்" எனக் கூறலாயினர்.

# குடும்பசெபமாலைச் சமாகமம்

குடும்பசெபமாலை இயக்கத்தின் பெரியஅப்போஸ்தலரெனப் பெயர்விளங்கும் வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமிகளால் ஆங்கிலபாஷாஉலகில் இதுகாலவரை நடத்தப்பெற்ற மகாப்பெரிய குடும்பசெபமாலைச் சமாகமம் சிலதினங்களின்முன் ஆஸ்திறேலியதேச சிட்னிநகரிலே பேரான பந்தையவிளையாட்டுகளுக்குப் பேர்போன கிறிக்கெற் மைதானத்தில் நடைபெறலாயிற்று. அதிலே, 10,000 மக்கள் கலந்துகொண்டார்கள். இதிலும்கூடிய மாபெரும் சனத்திரள்மத்தியிலே அவர்பேசியது ஸ்பானியதேச மலாக்கா நகரிலாகும். அதிலே 1,50,000 மக்கள் சமூகமாயிருந்தார்கள். சிட்னிநகர சமாகமத்திற்கு அந்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் கில்றோய் ஆண்டவர் தலைமைவகித்தார். ஆங்குசமூகமாயிருந்த சாதாரண கத்தோலிக்கரின் நாமத்தினலே புதிய தென்வேல்ஸின் பிரதமரான திரு. ஜே. ஜே. காஹில் அவர்கள் பேசியபோது: "குடும்பசெபமாலைசெபிக்கும் பாரம்பரியமானது ஆஸ்திறேலியாவில் அதிகம்பழைமையான — நமது தேசத்தைப் போலத்தானே அதிகம்பூர்வீகமான தொன்ருகும்; ஆதியிற்குடியேறிய காலத்திலிருந்தே — புதிய தென்வேலஸ் ஓர் குடியேற்றநாடாகக் குழந்தைப்பிராயமுடைய தாய்க் குருமாரும், கோவில்களும் இல்லாத காலத்திலிருந்தே—நாள்முடிவில் செபமாலைசெபிப்பது கத்தோலிக்க மக்களின் வழக்கமாயிருந்த"தெனக் கூறினர். சமாகமத்தின்முடிவிலே சுப்பிறீங்கோட்டுநீதியரசரான திரு. மைக்கிவெமென்றஸ் அவர்களால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்கள் தொடர்ந்து வேதகலாபனைநடத்திவருவதையிட்டும், விசேஷமாய்க் கருதினல் விசின்ஸ்கி ஆண்டவரைப் பரதேசம் போக்கியதையிட்டும் எதிர்பேசி ஓர் பிரேரணைகொண்டுவந்து அரங்கேற்றப்படலாயிற்று.

## சிறியபுஷ்பத்தின் சரித்திரம்

லிசியேபதி அர்ச். சின்னத்தெரேசம்மாளுடைய சீவியசரித்திரத்தின் முழுப்பாகமும் பரிசுத்தஸ்தானத்தின் அங்கீகாரத்தோடு சமீபத்திலே பிரசுரஞ்செய்யப்படவிருக்கிறது. அப்போது லிசியேபதிக் கார்மேல் மடத்தின் தலைவியாயிருந்த தனதுசகோதரியின கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவள் இதை எழுதலானள். இந்தமுழுப்பாகமும வெளியிடப்பட வேண்டுமெனத் தெரேசம்மாளின்சகோதரியான யேசுவின் அக்னேஸ் தாயார் தங்கள்குடும்பத்தில் இன்னமும் உயிரோடிருந்துவருகின்ற தனது சகோதரியான திருமுகத்தின் ஜெனெவியெவ் கன்னியாஸ்திரியை 1950-ம் ஆண்டு கார்த்திகை 2-ந் திகதியன்று கேட்டுக்கொண்டார். ஆனல், 1952-ம் ஆண்டு புரட்டாசி 19-ந்திகதியன்றேபரிசுத்தஸ்தானம் அனுமதியளிக்கலாயிற்று.

## ஜனதிபதியின் கண்டனம்

போலாந்தின் திருச்சபைஅதிபரான கருதினல் விசின்ஸ்கி ஆண்டவரைக் கம்யூனிஸ்த அரசாங்கம் கைதுசெய்து காவலில் வைத்திருப்பதைக் கண்டனஞ்செய்து அமெரிக்க ஜனதிபதி ஐஸன் ஹாவர் அவர்கள் வாஷிங்ரன் நகரிலுள்ள தமது வெண்மாளிகையிலிருந்து வெளியிட்ட கடிதம் ஒன்றிலே, "கருத்துச் சுதந்திரமும், மனச்சாட்சிச்சுதந்திரமுமாய அடிப்படையான மனிதஉரிமைகளை மதிப்பதற்குக் கம்யூனிஸ்தர்கள் விரும்புகிருர்கள் என்பதற்கான அறிகுறிகளை எதிர்பார்க்கின்ற நம்மை மிதமிஞ்சிய விதமாக இதுசெயல் அதைரியப்படுத்துகின்றது" எனத் தெரிவித்திருக்கிருர்.

❊

## கவலை தெரிவிக்கின்ருர்

இங்கிலாந்திலே கன்ரர்பெறிநகர் அங்கிளிக்கன் புரொட்டஸ்தாந்தசபை அதிமேற்றிராணியாரான கனம். டக்றர் பிஷர் அவர்கள் கருதினல் விசின்ஸ்கி ஆண்டவர் கைதுசெய்யப்பட்டதையிட்டு வெளியிட்ட செய்தி ஒன்றிலே பின்வருமாறு கவலை தெரிவித்திருக்கின்ருர்: "ஓர் நாஸ்திக அரசாங்கத்தின் அறமுறையில்லாச் சுயேச்சை அதிகாரமானது போலாந்துத் தேசியதிருச்சபையின் வாழ்க்கையை அடக்கியொடுக்கிப் பிளவுபடுத்தவென்று இவ்விதம் முயன்றிருப்பது எங்கெங்குமுள்ள கிறீஸ்தவர்களையும் கவலைக்குள்ளாக்கி மனோவேதனைப்படச்செய்வதாகும். இக்காலத்திலே உலகின் அநேகபகுதிகளில் அரசாங்கம் தனக்குரியதாகாத—ஆனல், தேவனுக்கே உரிய—காரியங்களைச் சேசாருக்கென உரித்தாடுகின்றது. மக்களின் உண்மைச்சுதந்திரங்கள் அபகரிக்கப்படுகின்றன. கிறீஸ்தவர்கள் தங்கள்வேதத்துக்காகத் துன்புறுத்தப்படுகின்ருர்கள்" என்பதே.

# சந்தியாகப்பரின் திருசேத்திரம்

ஸ்பானிய தேசத்திலே சந்தியாகப்பரின் கம்பொஸ்ரெல்லா மேற்றிராசனத்துக்கு அடுத்துவரும் 1954-ம் ஆண்டு ஓர்பரிசுத்தவருடமாகும். அப்போது அதன் சொந்தத் திருக்கபாடத்திறப்புவிழா நடந்தேறும். சந்தியோகுமையோரென அறியப்படுகின்ற அர்ச். பெரியயாகப்பரிலிருந்தே அதற்கு இந்தநாமம் வரலாயிற்று. அவரின்திருமேனியானது கம்பொஸ்ரெல்லாநகரிலுள்ள உலகப்பிரசித்திபெற்ற திருசேத்திரம்ஒன்றில் இருந்துவருகின்றது. ரோமாபுரிக்கு வெளியே மேற்குத்தேசங்களில் அப்போஸ்தலர்ஒருவரின் கல்லறையைக் கொண்டிருக்கும் ஒரேயொரு மேற்றிராசனமாகக் கம்பொஸ்ரெல்லா இருந்துவரும் காரணமாகத் தனக்கென்று பரிசுத்த வருடம் ஒன்றைக் கொண்டிருக்கும் உரிமையைப் பரிசுத்தஸ்தானம் அதற்கு வழங்கலாயிற்று. அர்ச். பெரியயாகப்பரின் திருநாளாகிய ஆடிமாதம் 25-ந் திகதி ஓர்ஞாயிற்றுக்கிழமையிலவரும் எந்தஒரு வருடத்திலும் இந்த உரிமை அதற்குண்டு அடுத்தவருடத்திலே இதுசம்பவிக்கிறது. கம்பொஸ்ரெல்லாவின் யூபிலிவருடம் இந்தமார்கழி 31-ந் திகதியன்று திருக்கபாட திறப்புவைபவத்துடன் ஆரம்பமாகும். இனி அது 1965-ம் வருடத்துக்குமுன் ஓர்பரிசுத்தவருடத்தைக் காணமாட்டாது. இந்தயூபிலிவருடமும், ரோமாபுரி யூபிலிவருடமும் ஏககாலத்தில் நிகழவிருப்பதாலே ரோமாபுரிக்குப்பதில் கம்பொஸ்ரெல்லாவுக்கு யாத்திரைசெய்தும் யூபிலிப்பலன்களை அடைந்துகொள்ளலாம்.

# சத்தியவேத பாதுகாவலன்

1953-ம் ஆண்டு மார்கழி மாதம் 3-ந் திகதி





தேவ கிருபையினாலும்
பரிசுத்த ஸ்தானத்தின் தயவினாலும்
யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய
**ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.**
ஆகிய நாம்
நமதுமேற்றிராசனத்தின் சகலகுருமாருக்கும், விசுவாசிகளுக்கும்
சுபமும், கர்த்தரில் ஆசீர்வாதமும் கூறி

## "மரியாயின் வருட" த்தைப் பற்றி
# விடுக்கும் நிருபம்

**கிறீஸ்துநாதரில் நமக்கு மிகவும் அருமையான பிள்ளைகளே!**

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்திநாலாம் ஆண்டு திருச்சபையின் சரித்திரத்தில் "மரியாயின் வருடம்" என்றே பொறிக்கப்படும். மரியாய் தமது உற்பவத்திலே மாசற்றவர்; சீவியத்தின் உற்பத்தியிலிருந்தே அவருடைய ஆத்துமத்தில் அற்ப மாசேனும் அணுகவில்லை என்று கிறீஸ்தவர்கள் விசுவசித்து வந்தார்கள். இந்தச் சத்தியத்தை நூறு வருடங்களின் முன் எங்கள் தலைமையாயரும், ஆத்துமாக்களின் இடையனுமானவர் (உத்தியோக) தத்துவபூர்வமாகப் பிரகடனஞ் செய்தார். இந்த மகிமைக்குரிய சம்பவத்தின் நூற்றாண்டு நிறைவை முழுக் கத்தோலிக்க உலகமும் இவ் வருடத்திற் கொண்டாடும்.

செம்மமாசற்றவர் என்னும் நாமதேயத்தினால் அவவை மகிமைப்படுத்துவது அவருக்கு எவ்வளவு பிரீதியென்பதை எங்கள் பரிசுத்தஆண்டவள் கடந்த நூறுவருடங்களிலும் சந்தேகத்துக்கிடமில்லாத அடையாளங்களால் காட்டியிருக்கிறார். இந்தப்பிரகடன வாக்கொலிகெடாமுன்னரே அவ மசபியேல்மலையில் தரிசனமாகித் தாம் "அமலோற்பவ" மென்றுகூறி, திருச்சபைத் தலைவரின் வழுவாவரத்தையும், தமது மகிமைநிறைந்த இந்தப் பாக்கியத்தின் உண்மையையும் மோட்சமுத்திரையிட்டு உறுதிப்படுத்தியிருக்கிறார். அக்காட்டொட்டு, தேவதாயார் தனித்தும் பகிரங்கமாகவும் தரிசனந்தந்து, பிள்ளைகளுடன் தாய்போன்று எங்களுடன் தாமிருப்பதை உணரச்செய்து, எம்மை எச்சரித்தும், ஊக்கியும், காத்துவந்திருக்கிறார். இது மரியாயின் யுகம் என்க.

சருவ வல்லப சருவேசுரன் அவவுக்குக் கொடுத்த இத்தனிப்பெருமைக்காக நன்றிகூறி அக்களிக்கவும், "அமலோற்பவி" என்னும் புகழ்ப்பெயரால் அவரை நாம் சங்கிக்கவும் குறிப்பான நியாயமுண்டு. கடந்தநூற்றாண்டில் எம்நாட்டில் விசுவாசம் அத்தனை முன்னேற்றமடைந்தது அமலோற்பவ மரியாயின் கொடியின்கீழ் அன்றோ! நம்தேசத்தின் அதிகதூரமான மூலைமுடுக்குகளுக்கும் சத்தியத்தின் வெளிச்சம் பரவுவதற்கு மரியாய்க்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்களும், விசேஷமாய் மருதமடுத் திருக்ஷேத்திரமும் மெய்யானசக்தி நிலையங்களாய் விளங்கிவந்திருக்கின்றன. ஆகையால் இச்சுபதினத்தில் உலகெங்குமுள்ள விசுவாசிகளுடன் நாமும் ஏகோபித்துச் சருவேசுரன் இவ்வளவாய் மகிமைப்படுத்திய கன்னிமரியாயை நாம் தகுந்த முறையாய் மகிமைப்படுத்துவதும், அவவுக்களித்த பெருமைக்காகவும், அவரால் மனுக்குலத்துக்கு வந்த மகிமைக்காகவும் சருவேசுரனுக்கு நன்றி செலுத்துவதும் முறையும் தகுதியுமாகின்றன.

அடுத்த வருடம் எம்மேற்றிராசனத்தில் ஒரு விசேஷம்பெற்ற வருடமாய் விளங்கவேண்டுமென்பது எமது பேராவல். அவ்வருடம் மரியாய்க்கு அர்ப்பணஞ்செய்யப்பட்ட வருடமாகவும், ஆசீர்வாதப் பயன் நிறைந்த வருடமாகவும், தேவதாயைப்பற்றிய அறிவுமிகுந்த வருடமாகவும், அவர்பேரில் பக்தி, சிநேகப்பற்று என்பன எமது இருதயத்தில் அதிஆழமாய் வேரூன்றியிருக்கும் வருடமாகவும் இருத்தல் எமது விருப்பமாகும்.

எங்கள் இராக்கினியும், அன்னையுமான தேவதாயார் அதிகமதிகமாய் அறியப்பட்டுச் சிநேகிக்கப்படும்படியாக எங்கள் குருக்கள் சந்நியாசிகளும், கத்தோலிக்க சேவைபுரியும் உத்தமகிறீஸ்தவ குழுவினரும், விசேஷமாய்த் தேவதாயாரின் பத்திச்சபைக்குச் சேர்ந்தவர்களும் தங்கள்முயற்சியை அதிகரிக்கும்படி ஏவுகிறோம். எமது ஞானச்சீவியத்தில் தேவதாயார் வகிக்கும் இடமென்ன என்பதை விளக்கி நவநாள் ஆராதனை வேளைகளில் பல பிரசங்கங்கள்சொல்லிப் பத்திபுகட்ட வேண்டும் என்பதும் எமது கோரிக்கையாகும். அவரைப்பற்றிய அறிவு எவ்வளவு அதிகப்படுமோ அவ்வளவு அதிகமாக நாம் அவரை நேசிப்போம். எம்ஆசிரியர்களும், இளம்எழுத்தாளர்களும், "அமலோற்பவமரியா"யின் மகிமைகளை வர்ணித்துக் கத்தோலிக்கபிரசுரங்களுக்குக் கட்டுரைகள் வரைந்து, பாடல்கள் இசைத்து, அவர்சேவையில் ஈடுபடவேண்டுமென்றும ஆசிக்கின்றோம்.

எமது மேற்றிராசனமெங்கும் தேவமாதாவின் மகிமைக்காகக் கட்டப்பட்ட தேவாலயங்களும் சிற்றாலயங்களும் ஆங்காங்கு மலிந்துகிடக்கின்றன வென்பதைப் பெருமையுடன் கூறுகின்றோம். வேதகலாபனையும், சித்திரவதையும் அழிக்கமுடியாத தேவமாதாபக்தியை எம்சனங்கள் ஆழமாகக் கொண்டிருக்கிறார்களென்பதற்கு அது ஓர் எடுத்துக்காட்டு. இப்படிப்பட்ட ஆலயங்களுக்கு அடிக்கடி யாத்திரை செய்யும்படியும், நெடுங்காலமாகத் தேவதாயாருடைய நாளென்று வழங்கிவரும் சனிக்கிழமைகளைப் பரிசுத்தப்படுத்தும்படியும் விசுவாசிகளைக் கேட்கின்றோம்.

எமது விசாரணைப்பங்குகள் இத்தகைய புனித தலங்களுக்கு அநேக யாத்திரைகளை ஒழுங்குபடுத்தித் தாயாரை மகிமைப்படுத்துவதையும், கிறீஸ்துநாதரின் சீவியமேரையை ஒத்ததான தேவமாதாவின் சீவியமேரையைத் தங்கள் இருதயங்களில் நிறையச்செய்வதையுங் காண நாம் விரும்புகின்றோம். எமதுமேற்றிராசனத்தின் ஞானச்சக்தியின் ஊற்றாகிய மடுப்பதியிலே அடுத்த வருடத்தில் அநேகயாத்திரைகள் வந்துகூடுமென்பதில் எமக்கு ஐயமில்லை. எம்மேற்றிராசனத்தின் நாலாபக்கங்களிலுமிருந்து எம்ஞானமைந்தர் எல்லோரும் ஒருமத்தியஇடத்தில் ஒருகுடும்பம்போல் ஒன்றுகூடிப் பிள்ளைக்குரிய தமதுவணக்கத்தையும், அன்பையும் தங்கள்தாயாரும், இராக்கினியுமானவருக்குக் காணபிக்கும் நோக்கமாக 1954-ம் வருடஈற்றில் மரியாயின்வருடத்துக்கு முடிபுனைந்ததுபோல ஒருசமாகமத்தைக்கூட்ட நிச்சயித்துள்ளோம்.

வரப்பிரசாதங்களின் வருடமாகிய இவ்வாண்டில் எங்களுக்காகவும், எம்சமுதாயத்திற்காகவும் பலவரங்களைக் கேட்டுப் பெறவேண்டியிருக்கிறது. கிறீஸ்துநாதரின் சாயலைத்தரித்து, அவருடைய பிரதிமையை எங்களில் உண்டாக்கி, அவர்மனப்போக்கு எங்களிற் செறிந்துகொள்ளச்செய்வதினால் நாம் அவரில் சீவித்து, இயங்கி, அவர்மயமாகுவதே எம்ஞானச்சீவியத்தினதும், பக்தியினதும் நோக்கமாகும். கிறீஸ்துநாதரின்போக்கு எங்களிடம்த அமையவேண்டும். அதைத் திறமாய் அமைக்கக்கூடியவர் கிறீஸ்துநாதரைப் புல்லணையிலிருந்து சிலுவைவரையும் அவதானித்துவந்தவரான தேவதாயாரல்லாமல் வேறொருவருமில்லை. தமதுகுமாரனின் சாயலையொத்தவர்களாய் எம்மை ஆக்கும்பொருட்டே தேவதாயாரான கன்னிமரியம்மாள் எம்தாயாராகத் தரப்பட்டிருக்கிறார். இந்தஅழைத்தலுக்கு நாம் பிரமாணிக்கமுள்ளவர்களாகும்படி தேவதாயாரிடம் வரம் இரந்துகேட்போம்; கேட்டு, அவவுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதினால், அவவுடைய திருஉதாக்கனியாகிய யேசுவின்சாயலை அதிகமதிக மடைந்துகொள்வோம்.

பரிசுத்ததந்தை சொல்லுவதுபோல் "இந்நூற்றாண்டு விழாவானது எல்லோருடைய ஆத்துமங்களிலும் கத்தோலிக்க விசுவாசத்தையும், தேவதாயார்மட்டில் அயராதபத்தியையும் கொண்டிருக்கச் செய்வதுமாத்திரமல்ல, கிறீஸ்தவர்கள் தம்மாலானமட்டும் தங்கள் சீவியத்தையும் அக்கன்னிகையின் சீவியமாதிரிபோல் ஆகும்படி செய்யவும்வேண்டும். தங்களுடைய சொந்தச்சாயல் எப்பிள்ளைகளின்முகத்தில் புலப்படுமோ அப்பிள்ளைகளிடத்தில் தாய்மார் அதிகநேசம்கொண்டிருப்பதை நாம் அறிவோம். தம்திருக்குமாரனின்சிலுவைஅடியிற் கிறீஸ்துநாதருக்குப்பதிலாய்த் தாம் அடைந்த பிள்ளைகளாகிய நாமும் நினைவிலும், வாக்கிலும், கிரிகையிலும் தம்முடைய ஆத்துமசாயலைக் கொண்டிருக்கக் காணுவதே எங்கள் மதுரத்தாயாரின் விருப்பம். அதிலேயே அத்தாயார் அதிகசந்தோஷம் கொள்ளுவார் என்பதில் ஐயமில்லை. இன்னும் தேவமாதாவின்பத்திமுயற்சி சொற்சிறப்பிலேமாத்திரம் தங்கியிராது, உண்மையானதாய், பயன்அளிக்கக்கூடியதாய் இருக்கவேண்டுமாகில், ஒவ்வொருவனும் தன்தன் அந்தஸ்துக்குத் தகுந்தபடி இதன் மூலமாய்ப் புண்ணியத்தைச் சம்பாதித்தல் வேண்டும். பரிசுத்தகன்னிகை பாவமாசு இன்றி உற்பவித்தார் என்னும் பரமஇரகசியத்தின் ஞாபகத்தைக் கொண்டாடும்போது, முதன்முதலாக நாம் பாவத்தின் அற்ப மாசுதனையும் கூட அரோசித்துவெறுக்கும் தூய்மையான, செம்மையான சீவியத்தில் வளர அதுஎம்மைத் தூண்டவேண்டும்."

இவ்வரப்பிரசாத வருடத்தில் எம்தாயாரிடங் கேட்கவேண்டிய விசேஷ விண்ணப்பங்களுமுண்டு. எங்கள் காலத்தில் சீவிக்கும் வாலிபரை ஆசீர்வதித்துக் காப்பாற்றும்படி மாசற்ற கன்னித்தாயை மன்றாடுவோமாக! எங்கள் தேசத்தினதும், திருச்சபையினதும் எதிர்காலமுன்னேற்றம் அவர்களிலேயே தங்கியுள்ளது. அவர்கள் நன்மையையுண்டாக்கவோ அல்லது தீமையை விளைவிக்கவோ வல்லமை உள்ளவர்கள். அவர்களைத் தீயவழியிற் செலுத்தவும், தம்வலைக்குள் அகப்படுத்திப் பழுதுபடுத்தவும்வல்ல கெட்ட சத்துருக்களாகிய கெட்டபுத்தகங்கள், துன்மார்க்கப்பிரசுரங்கள், பார்வைக்குத்தகாத படக்காட்சிகள் தொழிற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இன்னோரன்ன ஆன்மஆபத்துக்களில் இருந்து வாலிபத்தின் தூய்மையைப் பாதுகாக்கும்வண்ணம் பரிசுத்தத்தினதும், அழகிய சிநேகத்தினதும் அன்னையான எங்கள் மாசற்றதாயை இரப்போமாக!

தேவநேசத்துடன் கூடிய எல்லாப் புண்ணியங்களும் விளங்குவதும், அன்பின்தேவன் ஆட்சிபுரிவதுமாகிய உத்தம குடும்பங்களே தேசத்தினதும், திருச்சபையினதும் இன்பச்செல்வங்கள். நசரேத்தூரில் எம்முடைய பரிசுத்த தேவதாயார் முன்மாதிரியான ஒரு குடும்பத்திற்குத் தலைமைபூண்டிருந்தார். தாய்க்குரிய பாதுகாவலில்வாழும் ஒருகுடும்பம் பலபுண்ணியங்களின் இருப்பிடமாகத்திகழும். அங்கு சிநேகம், பிரமாணிக்கம், கற்பு, நேர்மை, உண்மைத்தன்மை, தாழ்மை ஆதியாம்புண்ணியப் புஷ்பங்கள் மலரும். ஏறக்குறைய எங்களுடைய எல்லாக்கத்தோலிக்க குடும்பங்களிலும் தேவதாயாரின்பேரில் பத்தி சிறந்திருப்பது எமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. இப்பத்தி மரியாயின் வருடத்தில் இன்னும் அதிகரித்து ஆழமாய்வேரூன்றி நிலைக்கவேண்டுமென்பதே எமது ஆசையும் அவலுமாகும்.

பரிசுத்தமாதாவாகிய திருச்சபைக்காகவும் மன்றாடுவோமாக! இக்காலம் திருச்சபைக்குக் கஷ்டத்துக்கும், கவலைக்குமுரிய காலமாகும். சில நாடுகளில் அது வெறுத்துத் துவேஷிக்கப்பட்டு ஆக்கினைக்குள்ளாகிறது. கடவுளுக்கும், அவருடைய கற்பனைகளுக்கும் பிரமாணிக்கமாய் இருக்கிறபடியால், குருக்களும், விசுவாசிகளும் சிறைச்சாலைகளில் வேதனைப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அர்ச். கன்னிமரியம்மாள் "கிறீஸ்தவர்களின் சகாய"மாயிருக்கிறார். திருச்சபை தனது உரிமையாகிய சுயாதீனத்துடன் சருவேசுரனின் இராச்சியத்தைப்பரப்பத்தக்கதாக அதன்விலங்குகள் தளர்ந்துபோகும்நாள் சமீபித்துவர உதவிசெய்யும்படி கேட்போம்.

துன்பப்படுகிற மக்களுக்காக எங்கள் பரிசுத்த தாயாரை வேண்டிக்கொள்வோமாக! "பசித்திருக்கிறவர்களுக்குப் போசனத்தையும், நெருக்கிடைப்படுகிறவர்களுக்கு நீதியையும், தேசாந்திரிகளாகத்துரத்தப்பட்டோருக்குத் திரும்பத்தாய்நாட்டையும், இல்லம்அற்றோர்க்கு ஆதரவையும், அநியாய

மரய்ச் சிறையிலும் காவலிலும் இருப்போர்க்குச் சுயாதீனத்தையும் வேண்டுவோமாக! கடந்த யுத்தம் ஒழிந்து நெடுங்காலம் ஆகியும், இன்னும் வீடு தலைபெறாது தளர்ச்சியுற்றுப் பிரலாபிப்போர்க்கு, அவர்கள் விரும்பும் வீடு சேர்தலையும், ஆத்துமசரீர குருடருக்கு சோதிப்பிரகாசத்தையும், வெறுப்பு, பொறாமை, விரோதம் என்பவற்றால் பிரிந்திருப்போர்க்குச் சகோதரபாசம், நீதி, அன்னியோன்னிய சிநேகத்தையும் தேவதாயாரிடம் இரந்துகொள்ளுவோம்.” (பரிசுத்ததந்தையின் சுற்றுநிருபம்)

ஈற்றில், எங்கள்பிள்ளைகளில் அநேகருக்குக் குருத்துவத்திற்கும், சந்நியாசத்திற்கும் அழைத்தல் என்னும் வரப்பிரசாதத்தை அமலோற்பவ அன்னையிடம் இரப்போமாக! எம்இளைஞர் புண்ணியத்தில்வளரவும், “என்னைப் பின்செல்லுங்கள்” என்ற ஆண்டவருடைய அழைப்பில் பங்குபெற அன்னை வழிநடத்தவும் அவருடைய பாதுகாவலும், விசேஷபராமரிப்பும் தேவைப்படுகின்றன. அப்போஸ்தலவரிசையில் சேர்ந்துவிளங்க எங்கள் இளைஞர் ஆசைப்படாததையும், வாலிபரைச் சூழவுள்ள தீமைகளையும் கண்ணுற்றுத் தேவனின் திருச்சபை இன்று பிரலாபித்துக் கொண்டிருக்கின்றது. எங்கள் மன்றாட்டங்கள், தவ்திவேதனைகளைமுன்னிட்டு எம் அமலோற்பவ அன்னை குருக்கள், சந்நியாசிகள்ஆவதற்குப் போதிய ஆத்துமாக்களை எங்கள்மத்தியில் தெரிந்துவிடுவார். அப்போது தேவஇராச்சியத்துக்குப் போதுமான ஊழியர்களை மேற்றிராசனம் பெறக்கூடியதாய் இருக்கும்.

எவ்வாறு இந்த உபகாரங்களை எங்கள் பரிசுத்த அன்னையிடமிருந்து நாம்பெறமுடியும்? நாம் தாயாருடைய திருப்பதிகளைச் சந்திக்கப்போவோம். சனிக்கிழமைகளைப் பரிசுத்தப்படுத்துவோம். அவர் போல் நற்கிருத்தியங்களைச் செய்வோம். இவை எவ்வாறிருப்பினும், அத்தாயார் மிகவிரும்பும் பத்திமுயற்சி, செபமாலைத்தியானமே. இந்தச்செபமாலைப்பத்தி, விசேஷமாய்க் குடும்பங்களில் செபமாலை ஓதுதலே எம்மேற்றிராசனத்தில் மரியாயின் வருடத்தின் நிலையான ஞாபகசின்னமாக இருக்கவேண்டும்என்பது எமது ஆவலானவிருப்பமாகும். இவ்வருடத்தில் எங்கள்மேற்றிராசனத்திலுள்ள கத்தோலிக்ககுடும்பங்கள் ஒவ்வொன்றும் குடும்பசெபமாலை ஓதுவதற்கு உறுதிவாக்களிக்குமேயாகில் உண்மையாகவே எமது சந்தோஷம் பெரிதாகும். அதனால், எவ்வளவு ஆனந்தமும் இன்பமும் சகல குடும்பங்களிலும் நிலவும்! எங்கள் மேற்றிராசனத்திற்கும் எவ்வளவு அளவுகடந்த வரப்பிரசாதங்களை அது கொண்டுவரும்!! இதன்நிமித்தம் எங்களுடைய சகலவிசுவாசிகளையும், சிறப்பாக மரியாயின்சேனையாளரையும், எங்கள் பரிசுத்தஆண்டவளின் பாதுகாவலின்கீழ் ஒப்படைக்கப்பட்ட பத்திக்கூட்டங்களையும் குடும்பசெபமாலைப் பத்திபரவத் தம்மாலியன்றளவு முயற்சிக்கும்படி ஏவுகின்றோம். மரியாயின் வருடமாகிய அடுத்தவருடத்திலே இதுவே அவர்களுடைய பிரதான ஊழியமாக இருக்கவேண்டும். எங்கள் மேற்றிராசனத்தில் நூற்றாண்டுவிழாவின் நிலைநிற்கக்கூடிய ஞாபகசின்னமாக, குடும்பசெபமாலைப் பத்தியையே இவ்வாண்டில் விருத்திசெய்வோமாக. தேவமாதா மாசில்லாமலுற்பவித்த திருநாளைக் கொண்டாடும் மகாதினத்திலே தங்கள் ஞானமக்களான விசுவாசிகளைப் பரிசுத்த ஆண்டவளின்சுரூபத்தின்முன் ஒன்றுகூட்டிக் குடும்பசெபமாலைப்பத்தியை அனுசரிப்பதில் தாம்பிரமாணிக்கமாய் இருப்பர் என்னும் வார்த்தைப்பாட்டை, எங்கள் பரிசுத்தஅன்னைமேற்கொண்ட அன்புக்கும் பத்திக்கும் அடையாளமாக அச்சுரூபத்தின்முன் கொடுக்கும்படியும் சங்கைக்குரிய குருக்களிடம் கேட்கின்றோம்.

மரியாயின்வருடத்தில் நாம்பெறக்கூடிய எல்லாநன்மைகளையும் பெற்றுக்கொள்ளும்படியாகப் பின்வருவனவற்றை அனுசரிக்கும்படி விதிக்கிறோம்.

1. மரியாயின் வருடத்தில் ஒவ்வொரு மீசாமிலும் ஒரு ஞானஒடுக்க மாவதி அல்லது ஒன்றுக்குமேற்பட்ட ஞானஒடுக்கங்கள் போதிக்கப்படவேண்டும். அவற்றில் எல்லாக் கிறீஸ்தவர்களும் பங்குபற்ற வேண்டும். எங்களுடைய ஆன்மசீவியத்தில் மரியாயின்பங்கு என்னஎன்பது ஆராயப்படவேண்டிய பிரதான விஷயமாகும். கோவில் திருநாட்களின்முன்வரும் ஆயத்தநினங்களாகிய நவநாட்காலங்களிலே விசேஷபிரசங்கங்கள் போதிக்கப்படவேண்டும். இத்தருணங்களில் செபமாலைப்பத்தியை உண்டாக்க எல்லாமுயற்சியு மெடுக்கவேண்டும். நவதின ஆராதனைநேரத்தில் ஓதப்படும் செபமாலையை விளக்கத்துடன் சொல்லுவிப்பது மெச்சத்தக்கதாகும்.

2. ஒவ்வொரு மீசாமிலும் சமீபமாய் உள்ள தேவமாதாவின் ஆலயத்திற்கு யாத்திரையாய்ச்சென்று அங்கு நாம் மேலேகுறிப்பிட்ட மரியாயின் வருடத்தின் நோக்கங்கள் நிறைவேறும்படி மன்றாடவேண்டும்.

3 மரியாயின் வருடத்திலே மீசாம்களில் இருந்து மருதமடுத் தாயாரின் திருப்பதியைத் தரிசிப்பதற்கான யாத்திரை முஸ்தீபுகளை ஒழுங்குபடுதத வேண்டும். இந்தயாத்திரையை ஒழுங்குசெய்யும் சட்டனைக் குருவானவரும், அவருடைய காரியநிர்வாக அங்கத்தினரும் தங்களுக்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்வதற்காகத் திருமருதமடுப் பரிபாலக சுவாமியாருக்கு அறிவித்தல் உசிதம்.

4. எங்கள் பரிசுத்த ஆண்டவள் பேரால் நடத்தப்படும் பத்திக் கூட்டங்கள் புத்துயிரும், புனருத்தாரணமும் பெறவேண்டும். புதுச்சீவியத்தாலும், உற்சாகத்தாலும் நிறைந்து வழியவேண்டும். பழையகூட்டங்கள் புதுப்பிக்கப்படவும், புதியகூட்டங்கள் ஆரம்பிக்கப்படவும் வேண்டும்.

5. முன்சொன்னதுபோல் மரியாயின் வருடத்தின் ஞாபகசின்னமாக நிலைத்திருக்கவேண்டிய ஒருசிறந்தபத்திமுயற்சி குடும்பசெபமாலை ஓதுதலே எங்கள் மேற்றிராசனத்திலுள்ள எல்லா இல்லங்களிலும் இப்பத்திமுயற்சியைத் தாபிப்பதே எமதுநோக்கமாகக்கொண்டு எவ்வகையான முயற்சிகளையும் குறைவறச்செய்வோமாக! எல்லாமீசாங்களிலும் “குடும்பசெபமாலைப் படையணி” ஆரம்பிக்கப்பட்டு ஞானமேய்ப்போரும், மரியாயின் அன்பர்களும் அப்படையணியிலே எல்லாக்குடும்பங்களையும் அங்கத்தவர்களாகச் சேர்க்க அயராதுழைப்பார்களாக! இவ்வருடம் மார்கழிமாதம் 8-ந் திகதி அமலோற்பவ நாயகியின் திருநாளன்று, எங்கள் மீசாங்களில் குடும்பசெபமாலைப் படையணியை ஆரம்பிக்கலாம். அன்று எல்லாக்கிறீஸ்தவர்களும் பரிசுத்த தேவதாயாரின் சுரூபத்திற்கு முன்பாகக்கூடி ஒருசிறு போதனையின்பின் குடும்பசெபமாலை ஓதுதலைத் தாம் பிரமாணிக்கமாய்க் கடைப்பிடிப்பர் என்பதற்கு அடையாளமாகக் கையொப்பமிட்டபத்திரங்களை எங்கள் ஆண்டவளின்பாதங்களில் அவர்கள் வைப்பார்கள்.

6. குருத்துவ, சந்நியாச அழைத்தல்கள் உண்டாக மன்றாடுவதும் மரியாயின்வருடத்தின் பிரதானநோக்கங்களில் ஒன்றாகும். வருடம்முழுவதும் சொல்லப்படும பிரசங்கங்களிலும், செய்யப்படும் ஞானஒடுக்கங்களிலும் இந்நோக்கமும் பிரதான இடம் பெறவேண்டியது அவசியம். 1954-ம் ஆண்டு தைமாதம் 7-ந் திகதிதொடக்கம் 10-ந் திகதிவரையும் அழைத்தலுக்காக விசேஷவிதமாய் மன்றாடும் தினங்களாக — “அழைத்தல் திரிதின ஆராதனை” யாக அனுசரிக்கப்படும். இந்நாட்களில் மீசாமிலுள்ள பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் அழைத்தல்விஷயமாய்ப் புத்தி பிரசங்கங்களும், பூசைவேளையிலும், ஆசீர்வாதநேரத்திலும் செபங்களும் செய்யவேண்டும். பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலுமுள்ள மாணவர் அக்கருத்துக்காக விசேஷ ஒறுத்தல்கள், பரித்தியாகங்கள் செய்து, இம்மூன்று நாட்களிலும் செபமாலைசெபிக்கக் குருக்களும், உபாத்திமாரும் உதவிபுரிவார்களாக!

7. எல்லா மீசாங்களும் பங்குபற்றி மரியாயின் சமாகம மொன்றைக் கூடுவோம். எங்கள்தாயும், அரசியுமாகிய மரியாயிடத்தில் நாம் கொண்டுள்ள அன்பையும், பிரமாணிக்கத்தையும் காட்டுவதாகிய பூச்சியமுள்ள பகிரங்க கிருத்தியம் இதுவேயாகும். மரியாயின் சமாகமத்தில் ஞானோபதேசக் காட்சிகளும், தேவஅழைத்தல் சம்பந்தமான காட்சிகளும் பிரதானமாய்க் காண்பிக்கப்படும். இவற்றின் விபரங்களைப் பின்னால் தெரிவிப்போம்.

எமது அருமையான பிள்ளைகளே! பழமொழியாகமத்திலே தேவமாதாவைக் குறிக்கிறதென்று திருச்சபை படிப்பிக்கிறதைக் கேளுங்கள்: “அவளைக் கைநெகிழாதே, அவள் உன்னைக் காப்பாள்; அவளை நேசித்தால் உன்னைக் காவல் செய்வாள்...; அவளைக் கைக்கொண்டால் உன்னை மேன்மைப்படுத்துவாள்; அவளைக் கட்டியணைத்தால் அவள் உன்னை உயர்த்துவாள்; உன்சிரசிற்கு அதிகமான அருளைத்தந்து மேலான கிரீடத்தால் உன்னைப் பாதுகாப்பாள்.” இந்தவாக்கியத்தையே உங்களுக்கு இறுதிப் போதனையாகக் கூறி உங்கள்யாவரையும் ஆசீர்வதிக்கின்றோம்.

இஃது யாழ்ப்பாணத்திலே 1953-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 21-ந் திகதி தேவமாதா காணிக்கையாக்கப்பட்ட திருநாளில் நமது முத்திரையுடனும், கைச்சாத்துடனும், கருமாதிகார சுவாமியவர்களின் சாட்சியத்துடனும் விடுக்கப்பெற்றது.

இத்திருமுகத்தை அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை எமதுமேற்றிராசனத்திலுள்ள சகல கோவில்களிலும், சிற்றாலயங்களிலும் வாசித்து விளக்கப்படுத்த வேண்டியது.



✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

மேற்றிராணியாரின் கட்டளைப்படி
எஸ். இம்மனுவல், O. M. I.
கருமாதிகாரி

* * *

## “மரியாயின் வருட”
### விழாவின்போது
### யாழ்ப்பாண மேற்றிராசனத்தில்
### அடையக் கூடிய ஞானப் பலன்கள்

பரிசுத்த கன்னிமரியம்மாள் மாசில்லாமல் உற்பவித்தாரென்ற வேதசத்தியம் பிரகடனஞ் செய்யப்பட்ட நூற்றாண்டு நிறைவைத் தேவாதீனத்தால் திருச்சபைத் தலைவராயிருக்கும் 12-ம் பத்திநாதர் 1953-ம ஆண்டு புரட்டாசி மாதம் 8-ந் திகதியன்று விடுத்த “Fulgens corona gloriae” என்னும் நிருபத்தால், “மரியாயின் வருட”மாகக் கொண்டாடும்படி கற்பித்திருக்கிறார். அவ்விழா நடக்கிறதும் இவ்வருடத்தில் ஏராளமான ஞான நன்மைகளை அடையும்பொருட்டு, தேவதிரவிய அனுமானங்களின் திருச்சங்கத் தலைவரான கருதினலாண்டவருக்கு அளித்த பேட்டியில் “மரியாயின் வருட” முழுவதிலும் அடையக்கூடிய அநேக ஞானப்பலன்களை அருளச் சித்தமானார். அவைபின்வருவன:

1. “மரியாயின் வருட” ஆரம்பதினமாகிய 1953-ம்ஆண்டு மார்கழி 8-ந் திகதியன்றும், முடிவுதினத்திலும், தேவமாதாபிறந்த திருநாள், மங்களங்கேட்ட திருநாள், சுத்திகரத் திருநாள், ஏழுவியாகுலத் திருநாள், மோட்சாரோபணத் திருநாளிலும் சகல விசுவாசிகளும் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்படைந்தபின் திவ்வியநற்கருணை யுட்கொண்டு, தேவமாதாவின் பேரால கட்டப்பட்டகோவிலை அல்லது சிற்றாலயத்தைப் பத்தியாய்ச் சந்தித்து, அங்கு பரிசுத்தபிதாவின் சுகிர்த கருத்துகளுக்காக வேண்டிக்கொள்ளும் ஒவ்வொருமுறையும் ஒரு பரிபூரண பலனடையலாம்.

2. மேற்கூறிய நிபந்தனைகளை நிறைவேற்றிய விசுவாசிகள் “மரியாயின் வருடத்தில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும், மேலே குறிக்கப்பட்ட கோயில்களுக்குக் கூட்டமாக யாத்திரை செய்யும் ஒவ்வொரு முறையும் பரிபூரண பலனடையலாம்.

3. மேற்கூறிய பிரகாரம் மனப்பக்குவமுள்ள விசுவாசிகள் தேவமாதாவுக்கு மகிமையாக நடத்தப்படும் திருச்சடங்குகளிலே பத்தியுடன் பங்குபற்றினால் ஒரு பரிபூரண பலனடையலாம்.

இந்த மனப்பக்குவ மில்லாதவர்கள் மனஸ்தாபத்துடனாவது பங்குபற்றினால் பத்துவருடப் பலனடையலாம்.

4. மருதமடுத் திருப்பதியில் விசுவாசிகள் மேற்கூறிய ஞானப்பலன்களையடைந்துகொள்வதுடன் “மரியாயின்வருட”த்தில் சனிக்கிழமைகளில் மாத்திரமல்ல, மற்றநாட்களிலும் ஒரு பரிபூரண பலனடையலாம். இதற்குரிய நிபந்தனைகளாவன: பாவசங்கீர்த்தனஞ் செய்து, சற்பிரசாதம் உட்கொண்டு, மடுக்கோவிலைப் பத்தியாய்த் தரிசித்து, அர்ச். பாப்பாண்டவரின் சுகிர்த கருத்துக்கள் நிறைவேறும்படி மன்றாடவேண்டும்.



ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்
27—11—53



# பாலர்  பக்கம்



## அண்ணு சொல்வது :

அருமைச் சகோதரங்களே!

இம்மாதம் 8-ந்திகதி தொடக்கம் அடுத்த வருடம் மார்கழி 8-ந் திகதி வரைக்கும் உள்ள காலத்தைத் "மரியாயின வருட" மாக அனுசரிக்க வேண்டும் என்று எங்கள் பரிசுத்தபிதா அறிவித்திருப்பதை நீங்கள் சந்தோஷத்துடன் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

இதைப் பற்றி எங்கள் மேற்றிராணியாண்டவர் ஒரு நிருபம் விடுத்து, மரியாயின் வருடத்தை நாம் அனுசரிப்பது எப்படி? இந்த வருடத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் அனுசரிக்க வேண்டிய விசேஷபக்தி என்ன? என்று விபரமாகச் சொல்லியிருக்கிருர். இவையெல்லாம் தேவதாயார் மாசில்லாமல் உற்பவித்தார் என்ற சத்தியத்தைப் பாப்பாண்டவர் தமது வழுவா வரத்தைக் கொண்டு பிரகடனஞ் செய்தபின் நூறு வருட நிறைவுக்கு நன்றி செலுத்தும் நோக்கமாகவே.

தற்காலத்தில் வழுவா வரத்தைக் கொண்டு திருச்சபை நமக்குப் படிப்பித்த வேருெரு சத்தியம், தேவமாதா ஆத்தும சரீரத்துடன் மோட்சத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டா என்பது. இப்படிப்பட்ட காலத்தில் சீவிக்க நமக்குக் கிடைத்தது பாக்கியமே. தேவமாதா "அமலோற்பவம்" என்னும் சத்தியத்தைப் பற்றி அர்ச். பிறிஜெட் என்பவரின் மந்திர மாலையில் சொல்லப் பட்டிருப்பதாவது:

இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தர் ஸ்துதிக்கப் படுவாராக. எங்கள் தேவன் பிதா சுதன் இஸ்பிரீத்து சாந்துவுமாக. ஏனெனில், தமது தீர்க்கதரிசிகளின் வாயால் முன் செப்பியது போன்று இப்பொழுது தமது கன்னிகை மூலம் எம்மைத் தரிசித்திருக்கிருர்.

நித்திய காலமாக அவளைத் தமது மாசற்ற மாதாவாக நியமித்து, அவள் மூலம் தமது சனத்தின் இரட்சிப்பை நிறைவேற்றினுர்.

உங்கள் அன்புள்ள
அண்ணு

## என்ன சொல்லுது?

'ஜேயம்'

1
'கா' 'கா' என்று கரையுங் காகம்
என்ன சொல்லுது?
கர்த்தன் யேசு பிறக்கப் போருர்
என்று சொல்லுது.

2
'கூ' 'கூ' என்று கூவுங் குயிலே
என்ன சொல்லுது?
குடிலில் வந்து பிறக்கப் போருர்
என்று சொல்லுது.

3
'கி' 'கி' என்று பேசுங் கிளியே
என்ன சொல்லுது?
கீதம் பாடிப் புகழ்ந்தி டுங்கள்
என்று சொலலுது.

4
'ஊ' 'ஊ' என்று ஊதும் புருவே
என்ன சொல்லுது?
உள்ளத் தூய்மை கொண்டி டுங்கள்
என்று சொல்லுது.

## மோட்சவாசல் வீதி

வீயன்னு நகரில் மோட்சவாசல் வீதியென்ற பெயருள்ள ஓர் வீதி உண்டு. இப்பெயர் அவ்வீதிக்கு எவ்விதம் வந்தது?

பல வருடங்களின் முன் அவ்வீதியில் உள்ள கன்னியாஸ்திரி மடம் ஒன்றில் ஓர் கன்னியாஸ்திரி வாயில் காப்பவளாக இருந்தாள். அவள் கன்னிகாசிரமத்தில் கசப்புக் கொண்டு உலகத்துக்குத் திரும்ப ஆசித்தாள். ஓர் நாள் நள்ளிரவில் எல்லோரும் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் வேளை அவள் மடத்தை விட்டுப் புறப்பட்டாள். புறப்படுமுன் வாயிற் கதவுத் திறப்புகளை எடுத்து ஒரு தேவமாதா படத்தின் பின்னுல் ஒளித்து: "பரலோக மாதாவே! உமது அடியாள் இனிமேல் உலகத்தில் இருப்பாள்; இதோ திறப்புகள்; நீரே வாயிலைக் காத்துக் கொள்ளும்" என்று சொல்லி விட்டுச் சென்ருள்.

சென்றவள் ஏழுவருடங்களாக உலகத்தில் சீவித்தாள். இந்த ஏழு வருடங்களிலும் மடத்தை விட்டு ஓடினதை யிட்டு அவள் பட்ட மனக் கஸ்திக்கு அளவேயில்லை. கடைசியாக இழிவுற்று, மனம் உடைந்து, ஓர் இரவு கெஞ்சம் படபடக்க மடத்துக்குத் திரும்பினுள். ஒருவரும் அறியாமல் மடத்துள் புகுந்தாள். அங்கு, ஓ, ஆச்சரியமே! தான் மாதா படத்திற்குப்பின்னுல் ஒளித்து வைத்து விட்டுப் போன திறப்புகள் எவரும் தொடாமல் அப்படியே இருக்கக் கண்டாள்.

அவள் மடத்தை விட்டு வெளியேறியதை மடத்தார் அறியவில்லை. ஏனெனில், வாதாரியான அந்தக் கன்னியாஸ்திரி மடத்தை விட்டு வெளியேறின எழு வருடங்களிலும் தேவதாயார் தாமே வாயிலைக் காத்துவந்தார்.

— M. J M.

**********************

தற்காலப் பிரச்சினைகள் மத்தியில் நாம் சீவிப்பதையிட்டுக் கடவுளுக்குத் தோத்திரஞ் சொல்லுவோம். எவனுவது எக்கருமத்திலாவது மத்திமமாயிருக்க இடமில்லை.

— 11-ம் பத்திநாத பாப்பாணவர்

**********************

## இந்தப்பதி யாது?

நான்கு எழுத்துக்களால் ஆனது

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற பழமொழியில் முதல் இரண்டு எழுத்துகளையும் காணலாம்.

"காலை மாலை கடவுளை வணங்கு" என்ற நீதிமொழியிலே கடைசி இரண்டு எழுத்துகளையும் காணலாம்.

மல்லிகை, முல்லை, செவ்வந்தி, ரோசா எனும் மலர்களுள் ஒன்றிலே முதல் எழுத்தையும், கடைசி எழுத்தையும் கொய்து எடுக்கலாம்.

சந்திரன் கலை குறைந்துவந்து இருள் அடைந்தது என்றவாக்கியத்தில் இரண்டாம், நான்காம் எழுத்துகளைக் கண்டு கொள்ளலாம். கண்டுபிடியுங்கள்.

ஜுானகி

## கடமையே தபம்

ஒரு நாட்டில் ஓர் அரசன் நன்ருக ஆட்சி செய்து வந்தான். ஆனுல், தான் அவ்வாறு ஆட்சி செய்து கொண்டு வந்தால், ஒருவேளை தனது ஆன்ம காரியம் கெட்டுப் போகுமோ என்று நிலைசம கொண்டவனுய்த் தனது இராச்சிய பாரத்தைத் தன் மந்திரியிடம் கையளித்து விட்டுத் தபவேடம் பூண்டு கானகம் சென்று கடின தபஞ் செய்ய வேண்டுமென முடிவு கட்டினுன். மந்திரி எவ்வளவோ புத்தி சொல்லிப் பார்த்தான். அரசன் கேட்கவில்லை. எல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல வீணுனது. அரசன் தனிமையாகக் காட்டகம் சென்று கடுந் தபம் புரிந்து வந்தான். அப்போது ஓர் அசரீரி வாக்குக் கேட்டது. "அரசனே! உனது நாட்டில் இருக்கும் இன்ன தனவந்தனின் பணிப் பெண்ணைச் சந்தித்து அவளிடம் தபமுறையைக் கற்றுக் கொள்" என்று அது தெரிவித்தது. அரசன் அதற்குச் செவி சாய்க்கவில்லை. ஆனுல், அசரீரி மீண்டும் மீண்டும் விடாப்பிடியாய்ச் சொல்லிக் கொண்டே இருந்தது. ஈற்றில் ஓர் ஞானதனி அரசன் முன் வீசவே, அவன் அடிபற்ற மரம் போல் விழுந்தான். பிறகு மயக்கம் தெளிந்து தனக்குப் பணித்த படியே அந்தப் பணிப் பெண்ணிடம் சென்ற போது, அவள் எவ்வளவோ கஷ்ட வேதனையோடு தனக்கு இடப்பட்ட பணிகளை முறுமுறுப்பு இன்றிப் பரபரப்புடன் பொறுமையாகச் செய்வதைக்கண்ட அரசன் கடமையே தபம் என உணர்ந்தான். தனது தபவேடத்தைத் துறந்து முன்போலத் தனது கடமையாகிய அரசுபரிவதே மேலான தபம் என்பதை அறிந்துகொண்டான்.

"கடமையே தபம்." "தபம் செய்வார் தம் கருமம் செய்வார்."

பாக்கிய ரத்தினம் றீச்சேட்
'பூஞ்சோலை'
மாறுலை

## பாலியனின் ஆசை

ஓர் ஊரில் ஒரு கோவில் இருந்தது. அந்தக் கோவிலின் விசாரணைக் குருவானவரின் கீழ் ஜூசை என்னும் பாலியன் ஒருவன் வேலைசெய்து வந்தான். அவனைச் சுவாமியார் அன்பாக நடத்தி வந்தார். தானும் ஒரு குருவாக வர வேண்டும் என்ற தணியாத ஆசை அவனுக்கு இருந்தது. அதை அவன் ஒருநாள் சுவாமியாரிடம் வெளியிட்டான். அதற்கு அவர் தமது ஊன்று கோலை அவனுக்குக் காட்டி: "நீ இந்த ஊன்றுகோல் அளவு வளர்ந்த பிறகு உனது ஆசையை நிறைவேற்றி வைக்கிறேன்" என்ருர். சில நாட்களுக்குப் பின் சுவாமியார் இல்லாத வேளைகளிலே அவன் அவருடைய ஊன்றுகோலை எடுத்துக் கீழ்ப் பக்கமாகக் கொஞ்சம் கொஞ்சமாய் வெட்டிக் கொண்டு வந்தான். பின்னர் ஒருநாள் அவன் அதை எடுத்துக் கொண்டு போய் அவரிடம் காட்டினுன். அவர் அதன் கீழ்ப் பக்கம் வெட்டுண்டு இருக்கக் கண்டார். அதைப் பற்றி அவனிடம் வினவ, பாலியன் உண்மையைச் சொன்னுன். அவனுக்குக் குருவாக வர இருக்கும் ஆசையைக் கண்டு மேற்றிராணியாருடன் ஒழுங்குபண்ணி அவனைக் குருமடத்தில் சேர்த்து விட்டார்.

சி. பேர்னதேத் ஈஸ்வரி
தி. கு. க. மடம்,
மன்னுர்.

ஒரேயொருவரால் கட்டப்பட்ட கோவிலொன்று எங்காவது இருக்கின்றதா?

ஆம், பிரான்ஸ்தேசத்திலே பிக்காடியைச்சேர்ந்த வோர்விக்லெஸ்ரானுமிடத்தில் இருக்கின்றது. இது போல் லெக்கூத்துார்ரானும் சந்நியாசியால் கட்டப்பட்டது. அவர் இதைக்கட்டுவதிலே 43 வருடகாலம் ஈடுபடலாயினர்.

பாலர்பக்கத் தொடர்ச்சி

# நிறம் கொடுக்கும் போட்டி



அருமையான பிள்ளைகளே!

நிறம் கொடுக்கும் போட்டி இல. 2 இதோ வெளிவருகிறது. இதன் ஒழுங்கு முறைகள் கீழே தரப்பட்டிருக்கின்றன. நீங்கள் அவற்றைச் சரிவரப்படித்துப் போட்டியில் கலந்துகொள்ளுங்கள்.

### ஒழுங்குகள்

1. நிறப்பென்சில், அல்லது வர்ணலேகினி (Pastel) கொண்டே நிறங்கொடுக்கப் படவேண்டும். வாட்டர்கலர், அதிலும் ஒயில்கலர் பாவிக்கவேபடாது.

2. பத்திரிகையிலிருந்து படத்தை வெட்டித் தடித்தகடுதாசி (Drawing Paper) ஒன்றில் ஒட்டியும் நிறங்கொடுக்கலாம். ஆனால், படத்தின் அளவை எவ்விதத்திலும் காலங்குலத்துக்குமேல் பெருப்பிக்கப்படாது.

3. நிறங் கொடுப்பதற்காகப் படத்தைப் பிரதிபண்ணலாம். ஆனால், படத்தின் அமைப்பை மாற்றவோ, அன்றேல் கூட்டிக் குறைக்கவோ படாது. ஏனெனில், இது ஏதும் தந்திரத்தைக் கையாள வழிபண்ணிவிடும்.

குறிப்பு:— முடிவு திகதி 25-12-53. விடைகள் நான்குசத முத்திரை ஒட்டித் திறந்ததபாலில் அனுப்பப்படலாம்.

விலாசம்: "கணிதப்பூச்சி" ஆசிரியர் மேற்றிராணியார் மாளிகை, யாழ்ப்பாணம்.

# ஊமையரான அதிசய குருவானவர்

[ அத்தக்குடியின் முன்னாள்மேற்றிராணியாரான மகாவந். ஜி. எல். ரி. லேச் ஆண்டவர் ரோமாபுரியிலிருந்து எழுதுகின்றார்.]

ரோமாபுரியிலே யேசுசபையாரின் அதிகாரபீடத்தைச் சேர்ந்தாருள் ஜோண்பொஸ்கோ பேர்னியர் எனும் நாமமுள்ள ஓர்இளங்குருவானவர் இருக்கின்றார். சாதியிலே ஓர்பிரேசிலியரான இவர் லத்தீன்அமெரிக்க உதவிச்சிரேஷ்டரின் பதிலாளியாக இங்கே இருந்துவருகின்றார். "ஊமையரான குருவானவர் ஐந்து பாஷைகள் பேசுகின்றார்" எனும் தலையங்கத்தைக்கொண்ட சிறியகட்டுரை ஒன்றைப் பத்திரிகைஒன்றில் படித்து, அவருடையநாமம் வின்சென்ற் பேர்னியரென அறியவந்தபோது, அந்த வின்சென்ற்சுவாமியார் எவ்வழியிலாவது தங்களுக்கு இனத்தவராய் இருப்பாரோஎன்று நாம் ஜோண்பொஸ்கோ பேர்னியர்சுவாமியாரைக் கேட்டோம்.

அதற்குஅவர் ஓர்கால் புன்னகை செய்துவிட்டு, வின்சென்ற்சுவாமியார் தம்முடைய இளையசகோதரனே எனக்கூறிப் பின்வரும் மனோகரமான வரலாறுகளை நமக்குத்தெரிவித்தார்.

"ஐந்துஆண்களும், நான்குபெண்களுமாக நாங்கள் ஒன்பதுசகோதரங்கள். எங்களைப்பற்றிய விநோதம் என்னவாயின், எங்களிலே ஐவர் செவிடரும், ஊமருமாகப் பிறந்தமையே. வின்சென்ற் ஊமையும், செவிடுமாக 1921-ம் ஆண்டு பங்குனி மாதம் 2-ந் திகதி பிறந்தார். பதினன்காம்வயதிலே இவர் சாதாரணபிள்ளைகளைப்போன்று பார்வை, கேள்வியுடன் பிறந்த தமது இருசகோதரர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிக் குருத்துவபதவியை மேற்கொள்ள விரும்பினார். ஆனால், அது முடியவேமுடியாத காரியமென்று எல்லாரும் சொன்னார்கள். ஆயினும் சுற்றத்தவர்ஒருவர் இவரைப்போலவே முற்றும்செவிடராயிருந்த ஓர்பிரான்சிய குருவானவரை (தற்போது காலஞ்சென்றுவிட்டார்)ப்பற்றிய புத்தகம் ஒன்றை அனுப்பிவைத்து இவரை ஊக்கப்படுத்திவிட்டார். இது அவருக்கிருந்த சிக்கலைத் தீர்த்துவைத்தது.

"வின்சென்ற் சின்னக் குருமடம் ஒன்றில் ஏழுவருடம் செலவிட்டார். அதன்மேல் தத்துவசாஸ்திரமும், வேதசாஸ்திரமும் படித்தார். தமதுநீண்டகால பயிற்சியின்போது, அவர் ஓர்குருவாக அபிஷேகஞ்செய்யப் படுவாரென அவரதுசிரேஷ்டர்கள் அவருக்கு ஒருபோதுமே உறுதிசொல்லக் கூடியோராகவில்லை. கடைசியாக அவருடைய பயிற்சிகள் முடிவடைந்தன. 1950-ம் ஆண்டு ரோமாபுரிக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டார். அங்கே பன்னிரண்டாம்பத்திநாத பாப்பரசரது பேட்டிஒன்றைப் பெற்றுக்கொண்ட பின்பலதொடர்பானபரீட்சைகள் நடத்தப்பெற்றார். சகலபரீட்சைகளிலும் திருப்திகரமாக அரங்கேறினார். குருப்பட்டம் பெற்றுக்கொள்ளுமாறு ஓர் விசேஷஇளக்காரம் அவருக்குவழங்கப்படலாயிற்று.

"டெற்ரோயிட்நகரில் நிகழ்ந்த சர்வதேச கத்தோலிக்க செவிடர், ஊமர் சங்கத்தின் நான்காவது மகாநாட்டுக்குச் சமுகங்கொடுக்குமாறு அழைக்கப்பட்டார். அங்கே உற்சாகமானவரவேற்பு அருளப்பெற்றார். வண. வின்சென்ற் பேர்னியர்சுவாமியார் அங்கே செவிடருக்கென்றத் திவ்வியபூசைநிறைவேற்றிக் குறிப்பாஷையிலே மகாநாட்டில் ஓர்சொற்பொழிவும் நிகழ்த்தினார். சர்வதேச சங்கத்துக்குரிய தகுதிவாய்ந்த ஓர்மனிதர் இவரே. பிரான்சிய, இத்தாலிய, லத்தீனிய, போர்த்துக்கேயபாஷைகளிலே இவர் உதடுகூட்டினைதயும் வாசிக்கக்கூடியவராய் இருக்கின்றார். தற்போது ஆங்கிலத்திலும் அவ்விதம்வாசிக்கப் பயின்றுவருகின்றார்."

நல்லூர் மிசம்

# அர்ச். சவேரியார் ஆலயம்

வண. ஞானப்பிரகாசர் சுவாமியார் தமதுஇருதயத்துக்கு மிகவும் அருமையானதாகப் பாவித்துவந்த வேதப்பரப்புதற்தொண்டை ஏற்கனவே பெரியகோவிலில உதவிக் குருவானவராய் இருந்தபோதே ஆரம்பித்துவிட்டார். பின்பு தமதுதிருத்தொண்டை ஆற்றுவதற்கு வசதியானஇடம் சுண்டிக்குளியிலுள்ள சஞ்சுவானியார் கோவிலெனயூகித்து, அங்கே தமதுதலையிடத்தை மாற்றிக்கொண்டார். அதன்மேல் நல்லூர், அர்ச். ஆசீர்வாதப்பர்கோவில் அவரின் தலையிடமானது. ஈற்றில், சரித்திரஆராய்ச்சிமூலமாக அர்ச். சவேரியாரின் அடிச்சுவடுகள் பதிந்தஇடமென்று தாம் யூகித்தறிந்ததலத்திலே ஓர்காணிவாங்கிச் சிந்துதேசஅப்போஸ்தலரும், வேதப்பரப்புதலின் பாதுகாவலருமாகிய அர்ச். சவேரியார்போரால ஓர்ஆலயத்தைக்கட்டியெழுப்ப ஆரம்பித்தார்.

இவ்வாலயம் தொடக்கத்திலே அங்கு தற்போது தமிழ்ப்பாடசாலை இருக்கும்இடத்திலே ஒருகொட்டிற்கோவிலாய் ஆரம்பிக்கப்பட்டது. எங்கும்போல இங்கும் இக்கொட்டில் மூன்றுபாகங்களை உடையதாயிருந்தது. அவற்றில்ஒருபாகம், குருவானவர் வசிப்பதற்கான ஓர் அறைவீடு, மற்றோர்பாகம், திவ்விய பலிபீடம் நிறுவிநிற்கும் பலிபீடஸ்தானம், இன்னோர்பாகம, வெளிக்கோவில். அர்ச். சின்னப்பரின் தற்காலிக கூடாரத்தை யொத்த இந்தக்கொட்டிலில் இருந்துகொண்டுதான் ஏனைய பலஇடங்களிலும் பற்பல அர்ச்சியசிஷ்டர்களின் நாமங்களைக்கொண்ட பல கோவில்களைச் சுவாமியார் கட்டலாயினர். அக்காலத்திலேயே அர்ச். சவேரியார் ஆலயமும் ஓர்கற்கட்டடமாய் ஆரம்பிக்கப்பட்டது. மகாவந். யூலன்ஆண்டவர்அவர்கள் இங்கு அஸ்திவாரக்கல்லை ஆசீர்வதித்து நாட்ட எழுந்தருளிய போது கண்டகாட்சியானது இப்போதும் அக்காலச் சிறுபாலர்களின் ஞாபகத்திலுள்ளது. மிசாமும் வளர்ந்துகொண்டுவர, இந்தக் கட்டடமும் வளர்ந்துகொண்டுவந்தது. அக்காலந்தொட்டு அவருடைய பணத்தேவைகள் மிகஅதிகமாய் இருந்ததினிமித்தமும், அவர் பலஸ்தாபனங்களுக்கும் செலவிடவேண்டியவராய் இருந்ததினிமித்தமும் ஆலயத்தை முற்றாய் முடித்துக்கொள்ள அவருக்கு வசதிப்படவில்லை. கோவில் உருப்படியாகவே முடிந்தது. ஆனால், பூச்சுவேலை, கதவுகள், யன்னல்கள் ஆகியன அமைக்கும்வேலை இன்னும் நடைபெறவேண்டியிருந்தன.

சுவர்கள் நெடுங்காலமாகப் பூச்சின்றியே இருந்தமையால் சாந்துஅரிபட, கற்கள் ஒவ்வொன்றாகக் கழன்று கீழே விழஆரம்பித்தன. ஒருகால் முழுச்சுவருமே கீழே விழுந்துவிடுமோவென்று பயந்திருந்தோம். ஆகவே, சிலவருடங்களின்முன் ஆலயத்தின் கீழ்ப்பகுதியிலே சிலபாகங்களைப் பூசுவித்தோம். தற்போது அர்ச். சவேரியாரின் பேர்கொண்ட ஓர் உபகாரியின் பேருதவியால் முழுக்கோவிலுக்கும், முகப்புக்கும் பூச்சுவேலை நடத்துவதுமன்றி, விறாந்தைக்கும் சீமெந்துபோட்டு, ஓர்சிறந்த பலிபீடமும் அமைப்போமென நம்பியிருக்கிறோம்.

எமதுஉபகாரிகள் பலரினதும் பேருதவியாலேயே நாம் இப்பாரிய மிசாமின் பலதேவைகளையும் கவனிக்கக்கூடியதாய் இருக்கிறது. அவர்கள் அனைவோரையும் எமது செபத்தில் மறப்போமா? இவர்களின் ஆன்ம சரீர நன்மைகளைக்கோரி வெள்ளிக்கிழமைதோறும இங்கு ஆராதனை நடைபெற்றுவருகிறதென்பதைப் பலரும்அறிவார்கள். இத்திருநாள் காட்களில் நாமும், எமதுமிசாமில் அனுதாபமுள்ள பலரும் இவர்களுக்காக விசேஷவிதமாய் மன்றாடுவோமென்பதில் ஐயமில்லை. நல்லூர்மிசாமிலும் அதன் தொண்டுகளிலும் அனுதாபமுள்ளபலரையும் அர்ச். சவேரியார் ஆசீர்வதிப்பாராக!

ஓடர் அனுப்புவது:
Sub-Post office,
NALLUR.

விலாசம்:
Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

# நாலு சங்கதிகள்

— போலாந்திலே கம்யூனிஸ்தர்கள் மிகமும்முரமாக வேதகலாபனை நடத்திவந்தபோதிலும் அங்கு கிறாகோவ்நகரிலுள்ள பிரதமகுருமடமானது மிதமிஞ்சியவிதமாக 337 குருத்துவமாணவர்களால் தேங்கிப்போயிருக்கிறது. இவர்கள் போலாந்தின் நாலுபகுதிகளிலுமிருந்தே அங்குபோய்ச் சேர்ந்தவர்கள்.

— யுத்தத்தினாலே சீரழிந்த மக்களுக்கு அமெரிக்கஐக்கியதேச கத்தோலிக்கர் கடந்த பத்துவருடங்களிலும் 30 கோடி டலருக்குமேல் உதவியிருப்பதாக அமெரிக்க தேசிய கத்தோலிக்க தர்மஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது. இதுதவிர, 1,55,000 அகதிகள் அத்தேசத்திற்போய்க் குடியேற வசதியுஞ் செய்துகொடுத்திருக்கின்றார்கள்.

— கம்யூனிஸ்தர்களாலே சீனாவிலிருந்து மேலும் பன்னிரு கத்தோலிக்கமிஷனரிமார் வெளியேற்றப்பட்டுக் ஹொங்கோங்தீவுபோய்ச் சேர்ந்திருக்கின்றனர். இவர்களுடன் சென்ற புரட்டாசியிலே 81 மிஷனரிமார் அங்கிருந்து வெளியேற்றப்படலாயினர். இவ்வருடத்திலே எந்தமாதத்திலும் இவ்வளவுபெருந்தொகையான மிஷனரிமார் அங்கிருந்து வெளியேற்றப்பட்டதேயில்லை.

— நியூயோர்க்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன்ஆண்டவர் சமீபத்திலே அயர்லாந்துக் குடியரசுநாட்டிற்குத் தமது நான்குநாள் தரிசனையின்போது, வறியமக்களுக்குப் பகிர்ந்துகொடுக்குமாறு ஜனாதிபதி ஓ' கெல்லி அவர்கள்மூலம் அந்நாட்டிலுள்ள சென் வின்சென்ற் டி போல் சபைக்குப் பதினாயிரம்பவுண்பெறுமதியான செக்ஒன்றைக் கொடுக்கலாயினர்.

— பிறேசில்நாட்டின் கடற்படையானது தனதுகப்பல்களில் ஒன்றுக்குப் "பாத்திமாநாயகி" என்று நாமஞ்சூட்டியிருக்கிறது. இந்தக் கப்பலே சென்றவைகாசியில் பாத்திமாஅன்னையின் யாத்திரைச்சுரூபத்தை ரிற்றெரோய்நகரிலிருந்து றையோடி ஜனேறோநகருக்குக் குவான்பாறுக் குடாக்கடல் நீளம் கொண்டுசெல்லலாயிற்று.

— கருதினல் விசின்ஸ்கிஆண்டவர் ஓர்சந்நியாச ஆச்சிரமத்திற்போய் இளைப்பாறியிருக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறாரென்று போலாந்தின் கம்யூனிஸ்தஅரசாங்கம் தெரிவித்திருந்தபோதிலும் அவர் எங்கேயிருக்கிறார் என்பதைக் கண்டறிவதற்காகப் போலாந்திலுள்ள கன்னிகாமடங்களிலும், சந்நியாசஆச்சிரமங்களிலும் கத்தோலிக்கரால் நடத்தப்பட்ட அந்தரங்க தேடுதல் பலனளிக்கவில்லை.

* * *

உலகிலுள்ள 250 கோடி மக்களாலும் எத்தனைபாஷைகள் பேசப்படுகின்றன?

ஏறக்குறைய 7,300 பாஷைகள் பேசப்படுகின்றன.

## GOVT. TENDERS

**FOREST DEPT.**

N3462—Tenders for cross cutting into 6' or lesser lengths logs at Murasamoddai, Paranthan, Kilinochchi, Mankulam & Puliyankulam Depots, transport & deliver loaded into trucks at the respective Railway Stations, close at 12 noon on 22-12-53, For particulars apply to the D. F. O., N.D., Jaffna.

* * *

## அரசாங்க
### கேள்விப் பத்திரங்கள்

முரசுமோட்டை, பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம், புளியங்குளம் ஆகிய இடங்களிலிருக்கும வனபரிபாலன இலாகா மரக்காலைகளில் மரங்களை ஆறு அடி அல்லது ஆறு அடிக்குக் குறைந்த நீளத்துண்டுகளாக அரிந்து அவற்றைப் புகையிரதஸ்தானங்களுக்குக் கொண்டுபோய்ப் பெட்டியில் ஏற்றிக் கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் 1953-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 22-ந் திகதிபகல் 12 மணிமட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். இதுசம்பந்தமான ஏனைய விபரங்களை யாழ்ப்பாணம் வடபகுதி வனபரிபாலன இலாகா அதிபரின் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், சதாசகாயமாதாவின் மன்றாட்டினாலும், அர்ச். அந்தோனியாரின் வேண்டுதலினாலும் எனக்குவந்த வருத்தம் சுகமானபடியால் நன்றியறிந்தஸ்தோத்திரம்சொல்லுகிறேன்.

ஓர் அடியாள்

* * *

எனக்குவந்த வருத்தம்நீங்கி நல்லசுகம் கிடைக்கும்படியாக இருதயநாதரிடத்திலும், சதாசகாயமாதாவிடத்திலும், அர்ச். அந்தோனியாரிடத்திலும் மன்றாடி வந்தேன். அவர்களுடைய இரக்கத்தினால் எனக்கு நல்லசுகம் கிடைத்தது. நேர்த்தியின்படி பத்திரிகையிலே பிரசுரப்படுத்துகிறேன். T. M.

* * *

யேசுவின் திருஇருதயமே, திருக்குடும்பமே, சகலஅர்ச்சியசிஷ்டர்களே பாவிகளாகிய எங்கள்பேரில் இரங்கி எங்களுடையபிள்ளைகள் இருவர் பரீட்சையில் அரங்கேறப்பண்ணினதற்காக எங்கள் தாழ்மையான நன்றியைச் செலுத்துகிறோம். விசேஷமாய், யேசுவின் திருஇருதயத்தினதும், திருமுகத்தினதும் இரக்கத்தாலும், அர்ச். சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர் முதலானோருடைய மன்றாட்டாலும் எங்களுக்கு இந்தஉதவி கிடைத்தது. இன்னும் எங்களுக்குக் கிடைத்த அநேக உபகாரங்களுக்காகவும் எங்கள்நன்றியைச் செலுத்துகிறோம்.

தல்வாக்கொல்லை அ. பி. சி.

## மரணசெய்தி

புங்குடுதீவு அர்ச். சவேரியார் கோவிலைச்சேர்ந்த கிறீஸ்தவரும், பலவருடகாலம் அக்கோவிலைச்சேர்ந்த பத்திக்கூட்டங்களிற் சேர்ந்து பணியாற்றியவரும், ஊரிலுள்ளயாவராலும் நன்கு மதிக்கப்பெற்றவரும், இன்சொல்ஆதியாம் சுகுணங்கள் உடையவருமாகிய சுவாம்பிள்ளை பெண் இயக்கோவா என்பவ அந்திமநோய்கண்டு கடைசித் தேவதிரவிய அநுமானங்களைப்பெற்றுச் சென்ற 27-10-53 செவ்வாய்க்கிழமைமாலை மரணித்திலையாயினர். மறுநாள்மாலை மரியாயின்சேனை முதலாம்பத்திக்கூட்ட அங்கத்தினர், பாடசாலைச்சிறுவர்கள், ஆசிரியர்கள், இனசனர்சமூகமாக, வண. கட்டளைக்குரவர் துக்கசங்கீதம் பாடிக் கடைசிஆசிர்வாதம் கூறிநிற்க இவர்பிரேதம் நல்லடக்கம் செய்யப்படலாயிற்று. இவரை இழந்துதன்புறும் பிள்ளைகள்நாலவரோடும், மற்றும் ஏனையவரோடும் யானும் அனுதாபப்படுகின்றேன். மரிக்கும்போது இவருக்கு வயது 90.

R. I. P.

## எங்களிடம்



| | ரூ. | ச. |
|---|---|---|
| மலரோ—மணமோ ... (அருமையான ஓர் கத்தோலிக்க நாவல்) | 2 | 60 |
| அன்பின் அழைப்பு ... (நமது ஆண்டவர் சங். ஜோசெப்பா மெண்டஸ் சகோதரி மூலமாக உலகத்துக்கு அறிவித்த செய்திகளின் சுருக்கம்) | 2 | 75 |
| யேசுநாதர் — உயர்நிலைப்பதிப்பு | 3 | 90 |
| யேசுநாதர் — மலிவு பதிப்பு (கிறீஸ்துநாதரின் வரலாற்றைத் தெளிவாகவும், விளக்கமாகவும் கூறும் நூல்) | 2 | 75 |
| வாழ்க்கையில் வழிகாட்டி (ஞானச் சீவியத்திற்கு உதவியானது) | 3 | 00 |

* * *

### 1954-ம் ஆண்டுக்கான இலங்கைச் சத்தியவேத பஞ்சாங்கம்

பிரதி விலை சதம் 25.

இவைகள் விற்பனைக்கிருக்கின்றன.

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
யாழ்ப்பாணம்

## கரையூர் விவாக இலாபநிதிச் சங்கம்

### 1953-ம் ஆண்டு புரட்டாசி, ஐப்பசி இலாப உபகரிப்பு

| இல. | பெயர் | விலாசம் | வருஷம் | தொகை |
|---|---|---|---|---|
| 70 | றெகோரி விக்ரோறியா | யாழ்ப்பாணம் | 12 | 310-00 |
| 71 | தம்பிமுத்து செல்லமுத்து | குருநகர் | 11 | 240-00 |
| 72 | அந்திரேசுப்பிள்ளை மோசேஸ் | இளவாலை | 12 | 300-00 |
| 73 | பிலிப்பு சிமாம்பிள்ளை | கானுட்டான் | 12 | 300-00 |
| 74 | அந்தோனி மரியான் | இளவாலை | 11 | 240-00 |
| 75 | குருசுமுத்து சலோமை | பாஷையூர் | 11 | 240-00 |
| 76 | அந்தோனிப்பிள்ளை றோசம்மா | மிருசுவில் | 9 | 180-00 |
| 77 | டானியேல் நீக்கிலாப்பிள்ளை | இளவாலை | 8 | 160-00 |
| 78 | அன்னம்மா மனுவேல்பிள்ளை | காம்பன் | 12 | 295-00 |
| 79 | பறுநாந்து முடியப்பு | இளவாலை | 10 | 208-25 |
| 80 | நீக்கிலாப்பிள்ளை லூயிஸ் | மிருசுவில் | 10 | 200-00 |
| 81 | மரியாம்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை | கொட்டகப்புலம் | 9 | 183-00 |
| 82 | செபஸ்தி மரியை | சில்லாலை | 11 | 240-00 |
| 83 | யோவான் மரியம்மா | சுன்னுகம் | 11 | 240-00 |
| 84 | செ. ம. ம. செல்லம்மா | மிருசுவில் | 11 | 240-00 |
| | | | | 3576-25 |

கைகண்டபலன். ஆதாயத்தைக் கண்டபின்னரும் தாமதமா? நீங்களும் இச் சங்கத்திற் சேருங்கள். உங்கள் அயலவரையும் இதிற் சேர்த்துவிடுங்கள். யாழ்ப்பாண மேற்றிராசன கத்தோலிக்க குடும்பங்கட்குக் கிடைத்திருக்கும் அரியசந்தர்ப்பத்தை அலட்சியம் செய்யாதிருங்கள். விபரங்களுக்கு மேல்வரும் விலாசத்துக்கு எழுதுக.

காரியதரிசி
கரையூர் விவாக இலாபநிதிச் சங்கம்,
சந்தியோகுமையோர் கோவில்,
யாழ்ப்பாணம்.



## இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனல் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறான். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனுகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிருன். ஏதாவது அபாயம் நேருவதானல், தனக்கல்ல. அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிருன். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

### சிலோன் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்,

தலைமை ஆபீஸ் :
69, இராணி வீதி — கொழும்பு.

Ceylon Iusurance Co. Ltd. 69 Queen St., Colombo

## விற்பனைக்குத் தயார்!

"அழகிய கிறிஸ்மஸ் வாழ்த்துகள்"
பலவித வர்ணப் படங்களுடன்.

தனிப்படங்கள் ஒன்று: 2, 3, 6, 7, 10, 15, 17 சத வீதம்.

போஸ்காட் அளவுள்ள வாழ்த்துகள் ஒன்று: 7, 8 சத வீதம்.

(Folded) மடித்த வாழ்த்துகள் : 8, 12, 14 சத வீதம்.

அமெரிக்கன் படங்கள் : 75 சத வீதம்.

(முற்பணமின்றி வி. பி. அனுப்பப்படமாட்டாது)

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை.
யாழ்ப்பாணம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 3rd-1953